விலை சதம் 25. தொலைபேசி: 23411

# சுதந்திரன்

SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2002, ஐப்பசி 7உ (24-10-71) ஞாயிறு 1391 றம்ளான் 4 புத்தகம் 25 இதழ் 48

'செல்வா' கட்டுரைக்கு 'தினகர'னில்

# தடை

ஈழத்தமிழ் நாட்டின் சரித்திர நாயகரும் தமிழ் தேசிய இனத்தின் தந்தையுமாகிய பெரியவர் செல்வாவினுடைய வாழ்க்கை வரலாற்றை வெளியிடக்கூடாதென்று தினகரனுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. அமைச்சர் குமாரசூரியரின் உத்தரவுக்கிணங்கவே ஏரிக்கரை நிறுவன நிர்வாகம், தினகரன் ஆசிரிய பீடத்துக்கு இவ்வாறு கட்டளையிட்டுள்ளதாம்.



தமிழரசுத்தந்தைசெல்வா அவர்களது வாழ்க்கை வரலாறு முழுமையாக ஈழத்தில் இதுவரை யாராலும் எழுதப்படவில்லை யென்பது தெரிந்ததே. ஈழத்தமிழினத்தின் ஈடு இணையற்ற இத்தலைவரது சுவையான வாழ்க்கை

(11ம் பக்கம் பார்க்க)

## அவர்களே ஒப்புக் கொள்கிருர்கள்!

"விலைவாசிகள் தொடர்ந்து அதிகரித்துக்கொண்டே இருக்கின்றன.

"மக்களின் வாழ்க்கை வரவர கஸ்டமானதாகி வருகிறது; சகித்துக்கொள்ள முடியாத அளவுக்கு வாழ்க்கைச் செலவு உயர உயரப் போய்க்கொண்டிருக்கிறது—

"இதனுல் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தைப் பொறுத்து மக்கள் விரக்தியும் வெறுப்பும் அடையும் நிலை தோன்றிக் கொண்டிருக்கிறது."

—15 மாத கால ஐ. மு. அரசின் ஆட்சியைப்பற்றி கம்யூனிஸ்ட் ஏடான 'புதுயுகத்தின்' வர்ணனை— (9-10-71)

# ஆனந்தசங்கரியின் ஆதரவுடன் அக்கராயன் குளத்தில் சிங்கள குடியேற்றம்!

கிளிநொச்சி பா. உ. திரு. ஆனந்தசங்கரியின் பூரண ஆதரவுடன் கிளிநொச்சித் தொகுதியிலுள்ள அக்கராயன் கட்டில் 500 பயங்கரவாத இளைஞர்கள் (சிங்களவர்கள்) குடியமர்த்தப்பட விருக்கிருர்கள் என்று அறியப்படுகிறது. அங்கு பயங்கரவாதிகள் புனர் வாழ்வு முகாம் ஒன்றும் திறக்கப் படவிருக்கிறதாம்.

'கைவிடப்பட்டுள்ள அக்கராயன் கட்டு குடியேற்றத் திட்டத்தை அபிவிருத்தி செய்ய பயங்கரவாத இயக்கத்தில் ஈடுபட்டதாக சொல்லப்படும் 500 இளைஞர்கள் பயன்படுத்தப்படுவார்கள்' இது சம்பந்தமாக நான் அக்கராயன் கட்டை நேரில் சென்று பார்வையிடவுள்ளேன்.'

—மேற்கண்டவாறு விளையாட்டுத்துறை அமைச்சர் கே. பி. ரத்னுயகா கூறியுள்ளதாக ஒரு செய்தியை குணசேன ஸ்தாபனப் பத்திரிகைகள் பிரசுரித்துள்ளன.

## தமிழ் மாணவர்க்கு குழிபறிக்கும் மற்ருேர் சதி!

கடந்த ஆண்டு பல்கலைக் கழக பிரவேசத்தில் தரப்படுத்தல் என்ற போர்வையில் 'இனப்படுத்தல்' நடைபெற்றதும் இந்த இனவெறிக் கல்விக் கொள்கையால் தகுதியும் திறமையும் படைத்த தமிழ் மாணவர்கள் பலருக்கு பல்கலைக்கழக கதவுகள் மூடப்பட்டதும் தெரிந்ததே; 'தரப்படுத்தல்' என்னும் போர்வையின் கீழ் தமிழ் மாணவர்களின் கழுத்தறுக்கப்பட்டதென்ற உண்மை சந்திக்கு வந்ததும், இப்

(11-ம் பக்கம் பார்க்க)

## செல்லையா குமாரசூரியரும் எம். சி. சுப்பிரமணியமும் கூட சிங்களத் துவேஷிகளா?


'தமிழர்கள் எமக்கு எதிராக துவேஷம் பேசிய போதிலும் அவர்களுக்கும் அமைச்சர் பதவி, நியமன எம். பி. பதவி கொடுத்தே ஆட்சிக்கு வந்தோம்.

—துணை அமைச்சர் துடாவை, தினகரன் (17—10—71)

## தமிழ் மாணவர்களின் உயர் கல்விக்கு ஆபத்து!

### பேராசிரியரின் அபாய விளக்கு!

"யாழ்ப்பாணக் கல்லூரிகளில் இருந்து பல்கலைக் கழகக் கல்விபெற முயலும் தமிழ் மாணவரின் கதி இவ்வாண்டிலிருந்து மோசமடையப் போகின்றது. கூடுதலான தகுதியும் திறமையுமிருந்தும் தமிழ் மாணவர்கள் பலர் பல்கலைக் கழகத்தில் நுழையும் வாய்ப்பை இழந்து தவிக்கப் போகிருர்கள், உழைப்பாலும், அறிவாலும், தகைமையாலும் முன்னேற முடியாதபடி எமது தமிழ்பிள்ளைகள் தடுக்கப்படப் போகிருர்கள்."



—இவ்வாறு 'அபாயவிளக்கு' காட்டியுள்ளார் பேரா

(11-ம் பக்கம் பார்க்க)

# 'ஈழத்தமிழினத்தை கறுவறுக்கும் சூழ்ச்சி'



"தமிழ் நாட்டிலிருந்து இறக்குமதியாகும் தமிழ் பத்திரிகைகளுக்கும் சஞ்சிகைகளுக்கும் இந்நாட்டில் தடை விதிப்பதன் மூலம் இலங்கையரசு ஈழத் தமிழினத்தைத் தனிமைப்படுத்திக் கூறுபோட்டழிக்க முயற்சிக்கிறது: இந்தக் கலாசாரக் கழுத்தறுப்பை எதிர்த்துத் தமிழினம் பொங்கியெழ வேண்டும். தமிழ் நாட்டுக்கும் நமக்குமிடையிலான தொடர்பு, உறவு அறுந்து போனுல் காலகதியில் ஈழத்தில் தமிழினம் தனது தனித்துவத்தை இழந்து விடும்."

—இவ்வாறு தமிழரசுப் பொதுச்செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் சுதந்திரனுக்கு விடுத்த அறிக்கையொன்றில் கூறியுள்ளார்;

அந்த அறிக்கையில் அவர் மேலும் கூறியிருப்பதாவது:-

தமிழ் நாட்டுடனுன நமது மொழி, கலாசாரத்தொடர்புகள் துண்டிக்கப்பட்டு, ஈழத் தமிழினம் தனிமைப்படுத்தப்பட்டால், காலகதியில் நமது இனம் அழிக்கப்பட்டு விடும்; தமிழ் நாட்டில் பேசப்படும் தமிழுக்கும்நமது

(11-ம் பக்கம் பார்க்க)

## மூதூரில் தமிழ் புறக்கணிப்பு

மூதூரில் கூ: மொ: விற்பனை நிலையத்தில் உள்ள புதிய அறிவிப்புப்பலகை தனி சிங்களத்தில்மட்டும் எழுதப்பட்டுளது. இது இப்பகுதியில் வாழும் தமிழ்பேசும் முஸ்லிம்கள்—தமிழர்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது; இது ஒரு திட்டமிட்ட செயலா அல்லது தவறுதலா? இதுசம்பந்தமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை

(2ம் பக்கம் பார்க்க)

## காரை நகரில் களேபரம்!

### வளர்த்தகடா மார்பில் பாய்ந்தது!

காரை, யாழ்ரன் கல்லூரியில் அண்மையில் மேற்படி கல்லூரி முன்னுள் அதிபர் அமரர் சிவராசா ஞாபக மண்டபத் திறப்பு விழா நடைபெற்றது. மேற்படி வைபவம் திறப்பு விழா என்ற போர்வையில் [illegible] கோட்டை காவடி இராசா வின் ஐந்து வருட இருபது அம்சத்திட்ட வெளியீட்டிற்கு அவரது அடி வருடிகளால் ஒழுங்கு செய்யப்பட்டது. இவ்விழாவில் மாணவர்கள் நிகழ்சிகளும் ஒழுங்கு செய்யப்பட்டன.

(2-ம் பக்கம் பார்க்க)

## வடபகுதிப் பாடசாலைகளிலும்

# சிங்களத் திணிப்பு

வடபகுதிக் கல்லூரிகளில் மீண்டும் சிங்களத்தை திணிப்பதற்கு கல்வியமைச்சு திட்டமிட்டுள்ளது. முதன் முதலாக யாழ்ப்பாணக் கல்லூரியொன்றில் சிங்களம் திணிக்கப்படவுள்ளது.

தமிழ் பகுதிப்பாடசாலைகளில் சிங்களத்தை திணிப்பதற்கு சிங்கள அரசு அடிக்கடி முயற்சிப்பதும், தமிழரசுக்கட்சியும் தமிழ் மக்களும் காட்டும் கட்டுப்பாடான எதிர்ப்பினுல் அவை முறியடிக்கப்படுவதும் கடந்த சில ஆண்டுகளாக நடைபெற்று வரும் நிகழ்ச்சிகளாகும்.

கடந்த அரசாங்க காலத்திலும் அப்போது கல்வியமைச்சராக இருந்த ஈரியகொல்லை தமிழ் பாடசாலைகளில் சிங்களத்தை திணிக்க முயன்றதும் தமிழரசுக்கட்சியின் கடும் எதிர்ப்பினுல் அத்திட்டம் முறியடிக்கப்பட்டதும் தெரிந்ததே.

(11-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

# எண்ணம்

## சொரணையற்ற தமிழர்கள்!

நமது தங்கத் தமிழ்மொழி, ஈழத்தில் அழிக்கப்படுகிறது; ஒழிக்கப்படுகிறது; ஒதுக்கப்படுகிறது!—

நாளாந்தம் அரசுத்துறைகளிலிருந்து தமிழ் மொழி முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுவருகிறது!—

தமிழுக்கு ஆட்சிமொழி, நிர்வாகமொழி, தேசியமொழியென்கின்ற எவ்வித அந்தஸ்தும் வழங்கப்படாததுமட்டுமல்ல — மூன்றாந்தர மொழியாக—அடிமை மொழியாக அவமதிப்புக்குள்ளாக்கப்பட்டிருக்கிறது தமிழ்!—

தமிழ் மொழிக்குள் சிங்களச் சொற்களை ஊடுருவச்செய்து தமிழை கலப்புமொழியாக்கும் சதி முயற்சியும் தீவிரமாக நடைபெற்றுவருகிறது!—

தமிழ்பேசும் மக்களின் சொந்த தாயகமான—பாரம்பரிய உரிமையான—வடக்கு கிழக்கு மாகாணங்களிலேயே தமிழ் ஒதுக்கப்பட்டு சிங்களமும் ஆங்கிலமும் கொடிகட்டி ஆளுகின்றன.—

தமிழ்பேசும் மக்களின் தொண்டைக்குள் தனிச் சிங்களம் வலிந்துதிணிக்கப்படுகிறது—

தமிழ் மக்களோ மூன்றாந்தரப் பிரஜைகளாக்கப்பட்டுள்ளனர்!

உத்தியோகம் வழங்கப்படுவதில் — தொழில் வாய்ப்புக்களில்—தமிழ் இளைஞர்களுக்கு பாரபட்சமும் ஓரவஞ்சனையும் காட்டப்படுகின்றன.

சிங்கள அரச ஊழியர்களுக்கு இல்லாத சுமை தமிழ் அரச ஊழியர்களுக்கு மட்டும் சுமத்தப்பட்டு—சிங்களமொழி தேர்ச்சிபெறாத ஒரே காரணத்துக்காக தமிழ் ஊழியர்களுக்கு பதவி உயர்வு, சம்பள உயர்வுகள் பறிக்கப்படுகின்றன; சேவை நிரந்தரம் மறுக்கப்படுகிறது; சேவையிலிருந்தே நீக்கப்படுகிறார்கள்!

உயர்கல்வித்துறையில் தமிழ் மாணவர்களின் உரிமைகள் மறுக்கப்படுகின்றன: தகுதியும் திறமையும் படைத்த தமிழ் மாணவர்கள் பல்கலைக்கழகத்துள் நுழையமுடியாதபடி இன அடிப்படையில் ஒதுக்கப்பட்டார்கள். 'தரப்படுத்தல்' எனும் முகமூடிக்குள் நடந்த இக்கழுத்தறுப்பு அம்பலத்துக்குவரவே, இப்போது 'மாவட்ட அடிப்படை' என்கின்ற புதிய முகமூடிக்குள் புகுவதற்கு திட்டம் வகுக்கப்படுகிறது!—

வரவிருக்கும் புதிய அரசியலமைப்பின்படி, பௌத்தமதமே நாட்டின் ஏகபோக மதமாகப் போகிறது; சிங்களமொழியின் உரிமையும் ஆதிக்கமும் அந்தஸ்தும் மேலும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது!—

தமிழ்மொழிக்கு அரசியல் சட்டரீதியாக எவ்வித பாதுகாப்புமில்லை; தமிழுக்கு நீதிமொழி உரிமை; நிர்வாக மொழியுரிமை; எதுவும் இல்லை; தமிழ் பிள்ளைகள் தமிழில் கல்விகற்கும் உரிமையைகூட அரசியல் சட்டத்தில் சேர்த்துக்கொள்ள மறுத்துவிட்டார்கள்!—

இதன் காரணமாக பெரும்பான்மையான தமிழ் பிரதிநிதிகள் அரசியல் நிர்ணய சபையிலிருந்து வெளியேறி அதைப்பகிஷ்கரித்து வருகிறார்கள்—

இப்போது தமிழ்நாட்டிலிருந்து இறக்குமதியாகும் தமிழ்ப்பத்திரிகைகளுக்கும் சஞ்சிகைகளுக்கும், நூல்களுக்கும் தடைவிதித்து, ஈழத்தமிழினத்துக்கும் தமிழ் நாட்டுக்குமிடையே காலம் காலமாக இருந்துவரும் கலாசார உறவுகளை அறுத்தெறிந்து, இருநாட்டுக்கும் இரும்புத்திரைபோட முயற்சிநடக்கிறது!—

இப்படியெல்லாம் குமுறுகிறோம்; ஆத்திரப்படுகிறோம்; வெய்துயிர்த்து வேகிறோம்; கண்டனக்குரல் எழுப்புகிறோம்; காரசாரமாக எழுதுகிறோம்; பேசுகிறோம்!

ஆனால்—

யார் மேலே சொன்ன அத்தனை கொடுமைகளையும் நமக்கு இழைக்கிறார்களோ; யார் இந்நாட்டுத் தமிழினத்தின் உரிமைகளைப்பறித்து—தமிழ்மொழியைத் தாழ்த்தி—தமிழ் மக்களை மூன்றாந்தர மக்களாக அடிமைகள் போல நடத்தி வருகிறார்களோ; யார் தமிழினத்தை அழித்தொழிக்கக் கங்கணம்கட்டிக் கொண்டிருக்கிறார்களோ; அவர்கள்—

ஈழத் தமிழ் நாட்டிற்கு அடிக்கடி வெற்றி வீரர்களாகப் போய் வந்து கொண்டிருக்கிறார்கள்! அடிமைப்படுத்தப்பட்ட 'காலனி' பிரதேசத்துக்கு அடிக்கடி ஆதிக்கக்காரர்கள் 'உல்லாச' யாத்திரை போவது போல போய் 'உபதேசம்' செய்து கொண்டிருக்கிறார்கள்.

இப்படிப் பவனி செல்லும் அவர்களுக்கு தமிழர்கள் சிலர் கொடி, குடை ஆலவட்டம், பிடித்து—நிலபாவாடை விரித்து—மங்கையர் மதுவும் கொடுத்து—விருந்துபசாரங்கள் நடத்தி—'தேனீர்' விருந்துகள் கொடுத்து—ஆடம்பர வரவேற்புக்கள் அளித்து—நல்ல அடிமைகளாக நடந்து கொள்ளுகிறார்கள்!

தமிழ் பகுதியில் அண்மைக்காலமாக அடிக்கடி நடைபெற்று வரும் இத்தகைய 'கேவலங்களை' பார்க்கும்போது விடுதலை உணர்ச்சி கொண்ட தமிழ் இதயங்கள் வேதனையால் வெந்துகொண்டிருக்கின்றன; இரத்தக்கண்ணீர் வடிக்கின்றன!

சூடு, சொரணை, மானம், ரோசம் எதுவுமே தமிழனிடம் இல்லாமற் போய்விட்டதா? தன் நிலைமை உணராத இந்தத் தமிழ்சாதிக்கு எப்படிக் கிடைக்கப் போகிறது சுதந்திரம்—என்றே கேட்டிடத் தோன்றுகிறது!

நம்மை அழிப்பவர்களுக்கு நாமே ஆரத்தியெடுப்பதுவும் தமிழ் பண்பு என்று யாராவது கூறுவார்களானால் அந்தப் பண்பு நாசமாய்ப் போகட்டும்! நமது மக்களுக்கு இப்போதைக்கு அத்தகைய பண்பு எதுவும் வேண்டவே வேண்டாம்!

# "இலங்கைத் தமிழர் உரிமைப்போருக்கு தமிழ்நாட்டு மக்கள் தரும் ஆதரவை

## பத்திரிகைத் தடையால் குலைத்துவிட முடியாது!"

# தமிழக ஏடுகள் இறக்குமதித் தடைக்கு

## தி. மு. க. நாளேடு 'முரசொலி' கண்டனம்!

தமிழ் நாட்டிலிருந்து வெளிவரும் தமிழ் நாளேடுகளை இலங்கையில் இறக்குமதி செய்யக் கூடாது என்று இலங்கை அரசு உத்தரவிட்டுள்ளது; இந்த நடவடிக்கைக்கு இலங்கை அரசு கூறியுள்ள காரணங்கள் விநோதமாக இருக்கின்றன.

இலங்கையில் இருந்து வெளியிடப்படும் தமிழ் தினசரிகள் வளர்ச்சியடைவதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறதாம். அது மட்டுமன்றி அந்நியச் செலாவணியைச் சேமிப்பதற்காகவும் இந்த நடவடிக்கைமேற்கொள்ளப்படுகிறதாம்.

### குமார சூரியர் தமிழர் பிரதிநிதியா?

இலங்கையில் உள்ள திருமதி பண்டாரநாயகாவின் ஆட்சி இந்த முடிவை எடுப்பதற்குக் காரணம்—திருமதி பண்டா அமைச்சரவையில் உள்ள தமிழ் அமைச்சரான குமார சூரியர்தான் என்று கூறப்படுகிறது. குமார சூரியர் இலங்கை ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர். ஆனாலும் இலங்கையிலுள்ள தமிழ் பேசும் மக்களுக்கு தாம் பிரதிநிதி என்று அவர் கருதிக் கொள்வது உண்டு. அப்படியானால் அந்தக் கூற்றுப் பொய் என்பது பலமுறை நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

தமிழ் நாட்டில் உள்ள மக்களுக்கும், இலங்கையில் உள்ள தமிழ் மக்களுக்கும் இடையே அரசியல் உறவுகள் இல்லாமல் போனாலும் கலாச்சாரத் துறையில் தாய்த் தமிழகத்துடன் இதயபூர்வமாக இலங்கைத் தமிழர்கள் உறவு கொண்டு வருகிறார்கள். இதனைத் தவறு என்று கூறவோ—தடுக்கவோ முடியாது.

### தொடர்பு துண்டிப்பு

அதுமட்டுமன்றி இலங்கையில் மலைத் தோட்டங்களில் பல லட்சக் கணக்கான தமிழர்கள் வேலைசெய்கிறார்கள். அவர்களில் ஒரு பகுதியினர் இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பப்பட்டாலும் மற்றும் ஒரு பகுதியினர் இலங்கையில் வசிக்கிறார்கள்.

அப்படிப்பட்ட தொழிலாளர்களின் உற்றார் உறவினர்கள் தமிழ் நாட்டில் தான் உள்ளனர்.

ஆகவே இலங்கையின்பூர்வ குடிகளான தமிழர்கள் தங்கள் கலாச்சாரத் தாயகத்துடன் தொடர்பு கொள்ளவும்......அங்குள்ள இந்தியத் தமிழர்கள் தங்களைப் பெற்றெடுத்த தமிழ் நாட்டுடன் தொடர்பு கொள்ளவும் தமிழ் நாளேடுகளைத்தான் நம்ப வேண்டும்.

அப்படிப்பட்ட நிலையில் தமிழ் நாளேடுகளின் இறக்குமதியைத் தடை செய்து விட்டதன் மூலம் இரு நாடுகளிலும் வசிக்கும் தமிழர்கள் தொடர்பு கொள்வதை இலங்கை அரசு தடுத்து விட்டுள்ளது.

### சிங்களவரின் கைப்பாவைகள்!

இப்படி உத்தரவிட்டதற்கு அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்துவது ஒரு காரணம் என்று இலங்கை அரசு கூறுவதை ஏற்பதற்கில்லை;

ஏனென்றால் ஏராளமான ஆங்கில ஏடுகளையும் ஆங்கில நூல்களையும் [illegible] சிறிய வெளியீடுகளையும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய இலங்கை அரசு அனுமதிக்கிறது.

எனவே அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்துவதற்குத் தான் தமிழ்ப் பத்திரிகைகளுக்குத் தடைவிதித்தோம் என்று கூறுவது பொருந்தாத வாதம்.

இலங்கையில் உள்ள தமிழ் பத்திரிகைகளை வளர்ப்பதற்காக இந்த உத்தரவு போடப்பட்டுள்ளது என்றுகூறுவதை உண்மை என்று ஏற்றுக் கொண்டாலும்கூட அதனால் ஒரு பயனும் விளையப் போவதில்லை.

இலங்கையிலிருந்து வெளிவரும் தமிழ்நாளேடுகள் அனைத்தும் சிங்களவர்களின் கைப்பாவைகளே தவிர அங்குள்ள தமிழர்களின் மனவெழுச்சியை பிரதிபலிப்பவை அல்ல.

### இலங்கை தமிழ் தினசரிகளின் வேலை

ஆளும் கட்சிக்கும், மற்றுமுள்ள சிங்களக் கட்சிகளுக்கும் இலங்கைத் தமிழர்கள் மத்தியில் செல்வாக்கு தேடுவதற்காகவும், இலங்கைத் தமிழர்களிடையே ஒற்றுமை ஏற்படவிடாமல் தடுப்பதற்காகவும் தான் இலங்கையில் உள்ள தமிழ் நாளேடுகள் பாடுபடுகின்றன. இலங்கைத் தமிழர்களின் நம்பிக்கையைப் பெற்ற தலைவர்களின் நடவடிக்கைகளைத்திரித்தும் மறைத்தும் வேறுபடுத்தியும் செய்தி வெளியிடுவதுதான்—இலங்கையில் உள்ள சில தமிழ் நாளேடுகள் செய்யும் திருப்பணியாகும்.

இந் நிலையில் தமிழ் நாட்டில் இருந்து வெளிவரும் நாளேடுகளைத் தடைசெய்து விட்டால் இலங்கைத் தமிழ் நாளேடுகளை மக்கள் வாங்கி விடுவார்கள் என்று எதிர்பார்ப்பது மதியீனம் ஆகும்.

### தமிழரசு முயற்சி தோல்வி

இலங்கையில் உள்ள சிங்களக்கட்சிகளிடையே முற்போக்கு பிற்போக்கு அணிகள் உண்டு. இதில் முற்போக்கு அணியுடன் ஒரு கவுரமான உடன்பாட்டுக்கு வந்து செயல்பட—இலங்கை தமிழரசுக் கட்சி முயற்சி செய்தது. ஆனால் அந்த முயற்சிகள் எல்லாம் சிங்களத் தரப்பின் நல்லெண்ணக் குறைவின் காரணமாக தோற்றுப் போய்விட்டன.

எனவே இலங்கை தமிழரசுக் கட்சி மீண்டும் எதிர் வரிசையில் அமர்ந்துள்ளது. இதன் விளைவாக தமிழர்களால் ஏற்றுக் கொள்ளப்படாத குமார சூரியர் போன்றவர்கள் இலங்கை ஆட்சியில் பங்கு பெற்று தமிழ் மக்களுக்கு எதிரான பாதையைக் கடைப்பிடித்து வருகிறார்கள்.

### இலங்கை அரசு வெற்றி பெறாது!

இலங்கைத் தமிழ் மக்கள் நியாயமான உரிமைகளை அடையவேண்டும் என்று தாய்த் தமிழகத்தில் உள்ள மக்கள் கருதுவது இயற்கை. அந்த எண்ணம் தமிழ்நாட்டில் இருந்து வெளிவருகிற நாளேடுகளில் எப்போதாவது பிரதிபலிக்கக் கூடும். அதனைக்கூட இலங்கை அரசால் சகித்துக்கொள்ள முடியவில்லை என்பதைத்தான் இந்தத் தடை உத்தரவு எடுத்துக் காட்டுகிறது.

இப்படிப்பட்ட தடை உத்தரவுகளால் இலங்கைத் தமிழர்களுக்கு இன்னல்விளைவித்து அவர்களுக்கு கிடைக்கும் ஆதரவைக் குலைத்து விடலாம் என்று இலங்கை அரசு கருதிக் கொண்டால் அது வெற்றியடையப் போவதில்லை.

செய்திகளைப் படித்து அறிந்து கொள்வது மிகச் சாமானியமான அடிப்படை உரிமையாகும். அந்த உரிமையைக்கூட இலங்கைத் தமிழ் மக்களுக்கு வழங்க இலங்கை அரசு மறுத்து விட்டது என்பதன் வாயிலாக அந்த அரசின் சர்வாதிகாரப் போக்குத்தான் உலகத்துக்குத் தெரியவரும்.

முரசொலி-ஆசிரியர் தலையங்கம்.

(11. 10. 71)

## காரை நக...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திட்ட வீரனின் (25 வருட காலத்தில் பற்பல திட்டங்கள் தீட்டி வெளியிட்டவர்) பேச்சு குறித்த நேரத்தையும் கடந்து கலை நிகழ்ச்சி நேரத்தையும் எடுத்து வழ வழா என்று வழுக்கிக் கொண்டு சென்றது. கலை நிகழ்ச்சிகளுக்காக வந்திருந்தவர்கள் முணுமுணுக்கத் தொடங்கினர். வெளியேறும் நிலையும் ஏற்பட்டது. ஒருவாறு பேச்சு நின்றது.

கலைநிகழ்ச்சி ஆரம்பமாக; சென்ற 70 தேர்தல் காலத்தில் காதல் வாகனத்தில் பறந்து திரிந்து யாவரையும் கதிகலக்கி காவடி வீரனுக்கு வெற்றியீட்ட படாதபாடுபட்ட "கண்ணியவான்" ஒருவர் மதங்கொண்ட யானைபோல் மேடையிற் றேன்றி நின்றவர்கள் யாவரையும் தாக்கி அட்டகாசம் செய்தார்.

தடுக்க முற்பட்டவர்கள், எம். பிக்கு மேடை வகுத்தவர்கள், கல்லூரியாசிரியர்கள் அந்த மதயானையால் தாக்கப்பட்டனர். எம். பி. ஏதோ கேட்கமுற்பட்ட போது நான் வைத்த எம்.பி. என்னைக்கேட்க வந்ததோ என அதட்டி கழுத்தில் பிடித்துத் தள்ளிவிடப்பட்டார்.

எம். பி. யின் காரிக்கொடி பிடுங்கப்பட்டு காரும் தாக்கப்பட்டது. யாவரும் அஞ்சி ஓடிப் புகலிடம் தேடினார்கள். எம். பி. யின் வீட்டிலிருந்து பொலிசுக்கு ரெலிபோன் பறந்தது. பொலிஸ் மறுநாள் காலை வந்து விசாரித்துச் சென்றது. ஒரு கிராம சேவகர் குறித்து நபரைத் தண்டிக்க வேண்டுமென தீவிரமாய் முயற்சிக்கிறார். விஷயம் இப்போது பொலிசில் இருக்கிறது.

(காரை நகர் நிருபர்)

## மூதூரில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எடுத்து மூன்று மொழிகளிலும் அறிவிப்புப்பலகை இடம்பெற வழியமைக்க வேண்டும் என்று இப்பகுதி மக்கள் கோருகிறார்கள்.

(மூதூர் நிருபர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூரில் நாவலருக்கு நினைவு முத்திரை!

அன்பு நண்பா,

நாடாள்வோர் தமிழை ஒழித்திடுகின்றூர்; தமிழ் இனத்துக்குக் கேடுபல விளைக்கின்றூர்; என்றெல்லாம் நாள்தோறும் 'ஒப்பாரி'யிடுகிறீர்களே; பாரீர் எம் குமாரசூரியரின் பெருந்தொண்டை; நாவலருக்கு நினைவு முத்திரை வெளியிடுகின்றூர் அவர் பிறந்திட்ட நல்லை நகரிலே; இவரன்றே தமிழுக்குப்பெருமை சேர்த்திடுகின்றூர்; இவர் சார்ந்து நிற்கும் 'சோசலிச' அரசன்றே தமிழர்களைப் பெருமைப்படுத்துகிறது; இதுவெல்லாம் உன் கண்களுக்குப் படவில்லையோ; தூற்றிடுதலைத் தவிரப் போற்றிட உனக்குத் தெரியாதோ?

—இப்படியெல்லாம் கேட்டுக் கடிதம் ஒன்று வந்திருக்கிறது எனக்கு; கடிதத்தை எழுதியவருக்குப் பெயரை எழுதிடச் துணிச்சல் இல்லைப் போலும்; கூட்டணித் தோழர் யாரோ ஒருவர் தான் இதை எழுதியிருக்க வேண்டுமென்பதில் சற்றும் ஐயமில்லை!

# தமிழகத்துக்கும் ஈழத்துக்கும் இருப்புத்திரை!!

நல்லதை எவர் செய்திடினும்—அதைப் பாராட்ட—போற்றிட எப்பொழுதுமே பின் நிற்பவன் அல்ல நான். யார் குற்றியும் அரிசியாக வேண்டுமென்பதே என்னுடைய கொள்கை! போற்றிட வேண்டியதைப் போற்றவும் தயங்கேன்; கண்டிக்க வேண்டியவற்றை கண்டித்திடவும் தயங்கேன்; 'தூற்றுபவர் தூற்றட்டும், புழுதிவாரித் தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்; ஏற்றதொருகருத்தை எனதுள்ளம் என்றூல் எடுத்துரைப்பேன்—எதுவரினும் நில்லேன்; அஞ்சேன்' என்பதே என்னுடைய கொள்கை!

நாவலர் பெருமகனுக்கு நினைவு முத்திரை வெளியிட வேண்டுமென்ற கோரிக்கை—தமிழ் மக்களின் நீண்ட நாட் கோரிக்கை! முந்திய அரசின் காலத்திலேயே இக்கோரிக்கை ஏற்கப்பட்டுக் கொள்கையளவில் அது ஒப்புக் கொள்ளப்பட்டிருந்தது என்பதை நான் அறிவேன்.

நடைமுறைத் தமிழியக்கத் தலைவர் நண்பர் இளையத பி. நாவலர் முத்திரை சம்பந்தமாக ஓடியாடி அலைந்து திரிந்ததையும், முந்திய

# கிழிகிறது சூரியரின் முகத்திரை!!!

அரசின் காலத்தில் நடைமுறைத் தமிழியக்கத்தின் பொறுப்பில், ஓவியர் நண்பர் 'வி. கே.' யின் கை வண்ணத்தில் உருவான நாவலர் உருவப்படம் நினைவு முத்திரைக்காக வரைந்தனுப்பப்பட்ட வரலாற்றையும் நாம் மறந்துவிடவில்லை!

அன்று அஞ்சல் திணைக்களத்திஞல் ஏற்றுக்கொள்ளப்பட்டபடிதான்—அமைச்சர் குமாரசூரியர், ஐக்கிய முன்னணி அரசு அமைந்து பதிஞறு திங்கள் கழிந்து நாவலருக்கு முத்திரை வெளியிட முன்வந்திருக்கிறூர்! ஆகவே இது ஏதோதமது அசுர சாதனையென்று குமாரசூரியர் உரிமைகொண்டாடவும் முடியாது; குமாரசூரியர் ஏதோ அரும் பெரும் சாதனையை சாதித்துவிட்டார் என்று அவரை நாம் பாராட்டவும் முடியாது!

இன்று நாவலர் முத்திரை வெளியிடப்படுவதற்காக யாரையாவது பாராட்டிட வேண்டுமென்றூல் இந்த முயற்சியிலே இறுதிவரை ஓடியாடிப் பணியாற்றிய நடைமுறைத் தமிழியக்கத் தலைவர், நண்பர் இளையதம்பியையும், ஆறுமுகநாவலர் சபையினரையும் தான் பாராட்டிட வேண்டும்; போற்றிட வேண்டும்!

நாவலருக்கு இத்திங்கள் இருபத்தொன்பதாம் நாள் அமைச்சர் குமாரசூரியர் நினைவு முத்திரை வெளியிடுகிறூர்; உண்மை! ஆனல் அதுகண்டு நம்மால் களிகூரமுடியவில்லை; மகிழ்ச்சிக் கூத்தாடமுடியவில்லை — காரணம், நாவலர் எந்த கொள்கைக்காக—இலட்சியங்களுக்காக—இறுதிவரை வாழ்ந்தாரோ அந்த இலட்சியங்களை புதைகுழிக்கு அனுப்பத்துடிப்பவர்கள்தாம் இப்போது நாவலருக்கு நினைவு முத்திரை வெளியிடுகிறூர்கள்! தமிழ்மொழிக்கும் இனத்துக்கும் பச்சைத்துரோகம் புரிபவர்கள் இன்று நாவலருக்குப்பின்னுல் மறைந்து நின்றுகொண்டு 'நல்லவர்கள்' ஆகப்பார்க்கிறூர்கள்!

நெஞ்சில் உரமற்றவர்களை — நேர்மைத்திறனற்றவர்களை—வெறுத்துஒதுக்கியவர் நாவலர்! அந்நிய ஆட்சியை துணிச்சலுடன் எதிர்த்தவர் நாவலர்! அத்தகைய நாவலருக்கு நினைவு முத்திரை வெளியிடப்படும் இடத்தில் சிங்கள ஏகாதிபத்தியத்தின் அடிநக்கிவாழும் குமாரசூரியருக்கும், அருளம்பலத்துக்கும் அல்பிரட் துரையப்பாவுக்கும், 'நாவலர் பிற்போக்குவாதி — சாதிவெறியர்' என்று தூற்றிய எம். சி. சுப்பிரமணியத்துக்கும் என்னவேலை?

தமிழ், சைவம், இரண்டும் இந்நாட்டில் தலைநிமிர்ந்து வாழவேண்டும் என்பது நாவலர் ஏற்றுக்கொண்ட புனித இலட்சியம்! அதற்காகவே தன் வாழ்நாளை அர்ப்பணித்த மேதை நமது ஆறுமுகநாவலர்!

தமிழ்நாட்டை தமிழ் மக்களின் தாய் வீடாக—சைவப்பெருமக்களின் புண்ணிய நாடாக—கருதியவர் நாவலர்! தமிழ் நாட்டில் புகழ்க்கொடியேற்றி 'நாவலர்' பட்டம் பெற்றுத்திரும்பிய செம்மல் அவர்!!

இன்று நாவலருக்கு முத்திரை வெளியிடுவோர்—நாவலருக்காக கண்ணீர் மல்க உருகிடுவோர்—நடைமுறையில் செய்வதென்ன என்பதனை சற்றுச்சிந்தித்தால் நண்பா, நாவலர் முத்திரை வெளியிடுவதன் பின்னுலுள்ள கபடத்தனம், சூழ்ச்சி நன்கு புலப்படும்!!

நாவலருக்கு முத்திரை வெளியிடுகிறது அரசு; ஆனல் நாவலர் எந்தத்தமிழ்மொழியை தமது உயிரினும் மேலாக மதித்துப்போற்றினூரோ அந்தத்தமிழை நாயினும் கீழாக புறக்கணித்து ஒதுக்குகிறது அதே அரசு!

அரசுத்துறையில்—ஆட்சித்துறையில் திட்டமிட்ட தமிழ் ஒழிப்பு!

பரங்கிமொழியான அந்நிய ஆங்கிலத்துக்கு தரும் இடத்தைகூட தமிழுக்கு தர அரசு முன்வருவதில்லை!

அமைச்சர் குமாரசூரியரின் சொந்த அமைச்சிலேயே தமிழ் ஒழிக்கப்படுகிறது! ஒதுக்கப்படுகிறது! தனது அமைச்சிலேயே தமிழுக்கு உரிய இடத்தை தர வக்கற்ற நிலையில் இருக்கிறூர் 'தமிழர்' என்று தம்மைக் கூறிக்கொள்ளும் தபாலமைச்சர்!

தமிழில் கடிதம் எழுதும் தமிழனுக்கு அரசு தனிச்சிங்களத்தில் பதில் தருகிறது!

புதிய அரசியலமைப்பில் தமிழுக்கு ஆட்சி மொழி இல்லை!

## அரசியல் மேடை

தமிழ்மொழிக்கு நீதிமன்றமொழியந்தஸ்து இல்லை!

தமிழை வேரோடு கெல்லியெறிந்து தமிழ் மக்கள்மீது தனிச்சிங்களத்தை திணித்து தமிழர்களை சிங்களவர்களாக்க முனைகிறது அரசு!

தமிழின் நிலை இப்படியென்றூல் நாவலர் போற்றிய சைவமதத்தின் நிலையோ இன்னும் மோசமாகிவருகிறது!

புதிய அரசியலமைப்பின் கீழ் சைவமதத்துக்கு இல்லாத சலுகையும் உரிமையும் பௌத்த மதத்துக்கு தரப்பட்டிருக்கிறது; ஆம், பௌத்த குடியரசாகப்போகிறது இலங்கை விரைவில்!

தமிழ், சைவம்—இரண்டையும் தன் கண்ணெனப் போற்றிஞர் நாவலர்-அந்த இரண்டு கண்களையும் குத்தி தமிழினத்தை குருடாக்க நினைப்பவர்கள்தாம் தமது கொடுமையை மூடிமறைத்திட இன்று நாவலரின் துணையை நாடியிருக்கிறூர்கள்! நினைவு முத்திரை வெளியிடுகிறூர்கள்.

இதுமட்டுமா நண்பா, நாவலர் ஈழத்துக்கும் தமிழ்நாட்டுக்கும், உறவுப்பாலமாக விளங்கியவர்! ஈழத்தையும் தமிழ்நாட்டையும் ஒன்ருகவே கருதியவர்! இருநாடுகளையும் ஒருபோதுமே வேறுபடுத்திப்பார்க்காதவர்! அப்படிப்பட்ட நாவலருக்கு இன்று நினைவு முத்திரை வெளியிடுபவர்கள் தாம், ஈழத்துக்கும் தமிழ்நாட்டுக்குமிடையிலான கலாசார உறவுகளை அறுத்தெறிந்திடுவதில் வேகமாக முனைந்து நிற்கிறூர்கள்! தமிழ்நாட்டு ஏடுகளும் நூல்களும் இங்கு நுழையவிடாது இரும்புத்திரை போடுகிறூர்கள்!

நாவலருக்கு முத்திரை வெளியிடப் போவதாக குமாரசூரியர் இங்கு தம்பட்டமடித்திடும் அதேவேளையில் ஐ. நா. சபையில் உரையாற்றிய பிரதமர் திருமதி பண்டாரநாயகா என்ன கூறியிருக்கிறூர் தெரியுமா?

'இலங்கை ஒரு பௌத்த நாடு'

என்று திருவாய் மலர்ந்தருளியிருக்கிறூர்! இலங்கை, பௌத்தர்களும், இந்துக்களும், இஸ்லாமியர்களும் கிறித்துவர்களும் வாழும் நாடு' என்று கூறிட 'சோசலிச' அம்மையாருக்கு மனம் ஒப்பவில்லை! ஆம், நண்பா, இலங்கையை தனிபௌத்த சிங்கள நாடாக்குவதுதானே அம்மையாரர் ஆட்சியின் ஒரே திட்டம்! அதற்கு 'ஆமாம் சாமி போடுபவர் தானே குமாரசூரியர்!

இலங்கை ஒரு பௌத்த நாடு என்கிறூர் அம்மையார் அங்கு; இங்கு குமாரசூரியரோ நாவலருக்கு முத்திரை வெளியிட்டு தமது ஆட்சியின் தமிழினக்கொலையை மூடி மறைத்துவிட முயலுகிறூர்!

நல்லூரில் இருக்கும் ஆறுமுக நாவலர் சிலை வாய்திறந்து பேசிடின், என்ன பேசும்?

"படுபாவிகளே, நீங்களா எனக்கு நினைவு முத்திரை வெளியிடுகிறீர்கள்; பஞ்சமாபாதகர்களே! என்முன்ஞலே நிற்காது ஓடுங்கள்! என் கண்ணினுமினிய தமிழையும் சைவமதத்தையும் நாயினும் கீழாக மதித்து அழித்தொழிக்க முனையும் சண்டாளர்களே! உங்கள் நினைவு முத்திரை எனக்கு வேண்டாம்! என் அன்னைத்தமிழை அழிக்கும் கரங்களினுல்-என் சைவசமயத்துக்கு பௌத்தத்துடன் சமஉரிமை வழங்க மறுத்த கரங்களினுல்—ஈழத்துக்கும் தமிழகத்துக்கும் இருந்துவரும் கலாசார இலக்கிய மத உறவுகளை அறுத்தெறிந்து தமிழையும் சைவத்தையும் அழித்தொழிக்கும் உங்கள் பாவக்கரங்களினுல் — எனக்கு நினைவு முத்திரை வெளியிடவே வேண்டாம்! இந்நாட்டில் என் சைவசமயம் பௌத்தம் நுழையுமுன்பே நிலைபெற்று வாழ்ந்திருக்க — 'இலங்கை ஒரு பௌத்த நாடு' என்று கூறி என் மதத்தை இருட்டடிப்பு செய்தவர்கள் ஆட்சியிலே எனக்கேன் முத்திரை! இனத்துரோகிகளே! மதத்துரோகிகளே!, மொழித்துரோகிகளே என் முன்ஞல் நிற்கவும் அருகதையற்ற நரகப்பிறவிகள் நீங்கள்! இங்கிருந்து ஓடுங்கள்!!"

என்று 'சபித்து' விரட்டியடித்திடும் நாவலர் சிலை என்பது நாவலர் பெருமானது உள்ளத்து உணர்வுகளை ஆத்மீக எண்ணங்களை—தூய வாழ்வை புரிந்துகொண்ட நமக்கு புரிந்திடாமலா போகும்!

அன்புத் தோழன்

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கத் தமிழ் மொழியைக் காத்திட சிங்கத் தமிழினம் பொங்கியெழ வேண்டும்!

## மொழியைப் பறிகொடுத்தால் இனமும் அழிக்கப்பட்டுவிடும்!

### பாரதி விழாவில் இராசதுரை முழக்கம்!

ஒரு காலத்தில் உலகெல்லாம் பரந்து வியாபித்துப் புகழும் பெருமையும் மிக்க வகையிலே ஆட்சி நடாத்தி வெற்றிக் கொடி நாட்டிய மொழி தமிழ் மொழி. இன்று சந்திரனுக்குச் சென்று ஆராய்ச்சி நடாத்துகின்ற விஞ்ஞானிகளைக் கண்டு அதிசயிக்கின்றார்கள்: இன்றைய விஞ்ஞான சாதனைகளையெல்லாம் தோற்கடிக்கக் கூடிய முறையிலே, கிரகங்களின் நிலையையெல்லாம் அன்றே ஏட்டுச் சுவடிகள் வாயிலாகப் பொறித்து வைத்தவன் தமிழன்: தமிழினம் தான் கைக்கொண்டு வந்த விஞ்ஞான தத்துவங்கள் சாதனைகளையெல்லாம் இன்று கூட அறியாத இனமாகத்தான் இன்னும் வாழ்கின்றது: தமிழனின் கடந்த காலப் பெருமையை அறியாதவர்கள் தான், தமிழ் மொழியையும் இனத்தையும் உதறி உதாசீனம் செய்து சுயநலங்கருதி இனத்துரோகிகளாக மாறிக் காட்டிக் கொடுப்பதற்கு முனைந்து நிற்கிறார்கள். இப்படிப்பட்ட துரோகக் கூட்டத்தை யொழித்து ஒரு புதுமைத் தமிழ் சமுதாயத்தை உருவாக்குவதே இன்று தமிழினத்தின் மத்தியிலேயிருக்கின்ற மிகப் பெரிய பொறுப்பாகும்.

இவ்வாறு மீன்பாடும்தேனகத்தின் முதல்வர் எழில் தமிழ்ஆளர் திரு. செ. இராசதுரை நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற்ற ''பாரதி விழா''வின் இறுதி நாள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்தும்போது குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:-

அந்நிய ஏகாதிபத்தியத்தின் அடிமை மோகத்திலே இரண்டறக் கலந்து தமிழ் உணர்வேயற்ற நிலையில் வாழ்ந்து கொண்டிருந்த தமிழினத்தை, தனது பகுத்தறிவுக் கவிதையினால் புத்துணர்ச்சி உண்டாக்கச் செய்ததோடு தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வோமென்று முழங்கினார் பாரதியார்: தமிழ் தமிழனென்று மேடைகளில் முழங்குகிறோம்...ஆனால் இன்று தமிழரது இல்லங்களிலெல்லாம் தமிழ் அணு அணுவாக அழிக்கப்பட்டு வருகின்றது. வேற்று மொழியை வீதிகளிலே பேசுவதோடு நில்லாது அந்தந்த மொழிகளிலேயே சிறார்களை அழைத்து சின்னஞ் சிறு வயதிலிருந்தே அந்த மொழியினை அவர்கள் கற்றிடவும் வழி வகுத்து அதனால் பெருமிதமடைகின்றோம்.

#### தமிழ்த் தாய் மனம் வைத்தால் வாழ்வுண்டு

ஒரு மொழியைப் பேசுகின்ற இனம் மற்றோர் மொழியினைக் கற்றுக் கொள்ளக் கூடாதென்பதல்ல...... ஒரு இனத்தைப் பிறிதொரு இனம் நசுக்கி சிறுமைப்படுத்தி அடக்கி ஒடுக்கும்போது ஒடுக்கப்படுமினம் தனது மொழியைக் காப்பதற்கு எழுச்சி கொள்ளாவிடில், அந்த இனம் காலப் போக்கில் அழிந்துவிடும்.

தமிழினத்தைப் பொறுத்த வரையில் இன்று என்றுமில்லாதவொரு இக்கட்டான நிலையில் வாழ்கின்றோம். இந் நேரத்திலாவது எமது தமிழ் தாய்மார், எழுச்சியடைந்து மனம் வைப்பார்களானால் தமிழை இல்லங்கள் தோறும் வளர்க்கலாம். தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டுமென்று பாடினான் பாரதி! தமிழினம் இல்லங்களிலாவது தமிழை வளர்ப்பதற்குத் தயங்கும் தற்கொலைக்கு ஒப்பான இந்த நிலைமையை இனிமேலும் ஏற்படாது பார்த்துக் கொள்ள வேண்டுமென்று தமிழ் தாய்மாரை ''பாரதி''யின் பெயரால் கேட்கின்றேன்;

#### நெஞ்சுறுதியுண்டேல் வெற்றி நமதே

தமிழினம் காலப் போக்கில் இழந்துவிட்ட உரிமைகளைப் பெறுவதற்குக் கட்சி பேதங்களை மறந்து ஒன்றுபட வேண்டிய இக்காலக் கட்டத்திலாவது, இனத்தைப் பற்றி யாரும் கவலை கொள்ளாது தங்களது சொந்தச் சுய தேவையைப் பூர்த்தி செய்வதற்காக எதையும் செய்வதற்கு முன் நிற்கிறார்கள். தமிழினத்தின் குறைந்த பட்ச உரிமைகளைக் கூடத் தட்டிக்கேட்பதற்குத்திராணியற்றவர்களாக, நெஞ்சுரமில்லாதவர்களாகச் 'சரணாகதி'யடைந்திருக்கும் நிலையினைக் கண்டுதான் தமிழினம் வேதனையடைகின்றது. இன்றைய இத்துரோகத்தைப் ''பாரதி'' அன்றே பாடி வைத்தார்...''நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறனுமின்றி வஞ்சனை செய்வாரடி கிளியே, வாய்ச் சொல்லில் வீரரடி'' என்ற...பாரதியின் கூற்று இன்று எந்தளவுக்கு உண்மையாகியிருக்கின்றதென்பதை நன்கு உணரக் கூடியதாயிருக்கின்றது.

#### விஞ்ஞான சாதனையில் தமிழனின் புகழ்

முன்பு எத்துறையிலாவது தமிழினம் பின் தங்கியிருக்கவில்லையென்பதற்கு பல சான்றுகளை எடுத்துக்காட்டலாம். இற்றைக்கு பலவருட காலங்களுக்குமேல் தமிழ் அரசர்களால் உருவாக்கப்பட்ட உயர்ந்து மாடிகள், கோபுரங்கள், பாலங்களெல்லாம் இன்றும் எவ்வித அசைவுமின்றி இருக்கின்றன... ஆனால் இன்று விஞ்ஞான ரீதியிலே உருவாக்கப்படும் கட்டிடங்களெல்லாம் ஐம்பது வருட காலத்திற்குள்ளாகவே இடித்து விழுகின்ற நிலையினை நாம் காண்கின்றோம். இவைபோன்ற எத்தனையோ பொறியியல், விஞ்ஞான சாதனைகளெல்லாம தமிழனது தனித்திறமைக்கு எடுத்துக்காட்டாக இன்றும் விளங்குவதைக்காணலாம்; இன்று எந்த நாட்டினையெடுத்துக்கொண்டாலும், அங்கு வாழுகின்ற இன மக்கள் தங்களது பண்டைப் பெருமையையெல்லாம் அழிந்துவிடாது பாதுகாப்பதற்காகப் போராடும் நிலையினைக் காண்கிறோம். இன்று போர்க்களங்களாகக் காட்சியளிக்கின்ற நாடுகளிற் சில அன்று தமிழ் அரசர்களது ஆதிக்கத்திலே இருந்திருக்கின்றதென்பதற்கு ஆதாரங்களுண்டு.

#### கப்பலோட்டிய தமிழினம்

கப்பலோட்டிய இனம் தமிழினமென்பதை இன்றும் உணராத அறியாத தமிழர்களும் இருக்கவே செய்கின்றார்கள். ஒரு காலத்தில் தமிழனது கப்பல்கள் தங்கி நிற்காத துறைமுகங்களே கிடையாது என்று பெருமையோடு கூறலாம். இத்தனை புகழும் பெருமையும் படைத்த தமிழினமும், அந்த இனம் வாழும் பிரதேசமும் மொழி கலை கலாச்சாரம் யாவும், தாழ்வுற்ற நிலைக்குப் போகின்ற அவல நிலையினைக் கண்டுதான் ''பாரதி'' மனம் வெதும்பிக் கனல்கக்கும் கவிதைகளை முழங்கினார். யானை பார்த்த குருடர்களைப்போல பலரும் பல வித கோணங்களிலே நின்று பாரதியை நோக்குகிறார்கள்: ஒரு சிலர் பாரதியை இன்னும் சாதாரண புலவர்களிலொருவராகத்தான் கருதிக்கொண்டிருக்கின்றார்கள். ''பாரதி'' தமிழ் மொழிக்காக ஆற்றிய தொண்டுகளை அறியாதவர்கள் கூட விழா எடுக்கின்றார்கள்: ''பாரதி'' காட்டிய இலட்சியங்களென்ன...அவர் தமிழினத்திற்காக எதைச் சாதித்து விட்டுச்சென்றார் என்பதையெல்லாம் வருங் காலச்சந்ததிக்கு தெளிவாக எடுத்துக்காட்ட வேண்டும்.

#### இருளகற்றி ஒளியூட்டிய பாரதி

பாரதி தமிழ்மக்கள் மத்தியிலே தோன்றியதை ஒரு பெறற்கரிய பேறாக நாம் கருதவேண்டும். தமிழினத்தை இருள் சூழ்ந்திருந்த வேளையிலே இருளகற்றி ஒளியூட்ட ''பாரதி'' தோன்றி, தமிழகத்தின் அன்றைய நிலையினைக்கண்டு பாடிய உணர்ச்சிக் கனல்கக்குகின்ற கவிதைகளையெல்லாம் தமிழினம் திருப்பித்திருப்பிப்படிப்பதன் மூலம், ஒவ்வொருவரும் உணர்ச்சியும் எழுச்சியும் கொண்டவர்களாக மாறலாம்.

இன்று எமது நாட்டிலே தமிழனைப் பார்த்து தமிழிலே எவ்வித தொடர்பையும் வைத்துக்கொள்ளென்று இரந்துகேட்க வேண்டிய நிலைக்கு எமது ஈழத் தமிழினம் வந்து விட்டது. தமிழனே தமிழை மதிக்காது ஆண்டுக்கொரு முறை ''பாரதி''க்கு விழா எடுப்பதால் என்ன பயனென்று கேட்கிறேன். நாம் பேசுகின்ற மொழியை நாம் பேணிக்காப்பாற்றாது விட்டால் காலப்போக்கில் இனம் அழிந்து விடும். வெளி நாடுகளிலே எமது மொழிக்கு என்ன தீங்கு நேர்ந்ததோ அதே நிலை இங்கும் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகி விடும். ''பாரதி''யின் மூச்சு, எண்ணம் செயல் யாவும், தமிழ் தமிழ் என்றே இறுதி வரை ஒலித்தது. வருடமொரு தடவை அந்த ''வீரத்தமிழ் கவிஞன்'' பாரதிக்கு விழா எடுத்தால் மட்டும் போதாது! மாதமொரு முறையல்ல...வாரமொரு முறை விழா எடுத்து அவனது பெருமையை புகழைப் பேசினாலும்தகும்!

''அல்லல்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரன்றோ செல்வத்தைத் தேய்க்கும் படை'' என்ற முதுமொழியைப் போல, இந்த நாட்டிலே வாழையடி வாழையாக வாழ்ந்ததமிழினம் இன்று உரிமையற்ற இனமாக வாழுகின்ற நிலையினைப் போக்க, அனைவரும் உறுதி பூணவேண்டும். தமிழினம் விட்ட கண்ணீர் என்றும் வீண்போகாது நிச்சயம் ஒரு சுதந்திர சுபீட்சமான வாழ்வைத் தேடித்தரும். தமிழ் வாழ, தமிழினம் உயர, அனைவரும் உழைப்போமென்று இந்த ''பாரதி'' விழாவிலே நின்று திட சங்கற்பம் செய்து கொள்வோமாக!

## 'தி. மு. கழகம் தமிழ் தியாகிகளை ஒருபோதுமே கைவிடாது!'

### 'சிவலிங்கம்' சுரங்கப் பாதையை திறந்துவைத்து கலைஞர் உரை!

அகில உலக வரலாற்றில் வியட்நாமில் இருக்கின்ற பௌத்த பிக்குகள் தான் கொள்கைக்காக தீக்குளித்துச் செத்திருக்கிறார்கள்.

ஆனால் ஒரு மொழிக்காக தங்களது தேக்கு மரத்தேகத்தை தீயின் நாக்குகளுக்கு இரையாக்கிக் கொண்டு எட்டு தமிழ்ச் சிங்கங்கள் செத்தது அகில உலகத்திலேயே தமிழ் நாட்டில்தான் நடைபெற்றிருக்கிறது.

அப்படிப்பட்ட வீரர்களுக்கு எல்லா தமிழர்களும் வீர வணக்கம் செலுத்துவது தான் தலையாய கடமையாகும்.

தி. மு. க. கழக மாநகராட்சியாளரும் கழக அரசாளும் தன் கட்சித் தியாகிகளை மாத்திரமல்லாமல் வேறு கட்சித் தியாகிகளையும் மதித்து நடக்கிற நிர்வாகத்தைத்தான் நடத்திவருகிறோம்.

அதற்கான எடுத்துக் காட்டுக்கள்தான் கவிச்சக்கரவர்த்தி பாரதிக்கும் — கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிக்கும்—பெருந்தலைவர் காமராசருக்கும்—சிலை வைக்கப் பட்டது. கண்ணப்பர் திடலையும் எல்லாக் கட்சிகளும் அங்கீகரித்து [illegible].

திரன் சிவலிங்கம் என்ற பெயர் சாதாரணமானதல்ல; அவன் வாழ்க்கை சாதாரணமானதாக இருக்கலாம்; அவன் சார்ந்திருந்த கட்சி சாதாரணமானதாக இருக்கலாம்.

தொண்டர்கள் தான் ஒரு கட்சிக்கு முதுகெலும்புகளாக—ரத்த நாளங்களாக —நாடி நரம்புகளாக இருந்து இயக்கத்தை வளர்க்கிறார்கள்.

அப்படிப்பட்டவர்கள் மறைந்த பிறகு நாட்டுக்கும் மொழிக்கும் அவர்கள் கடமையைச் செய்து மறைந்த பிறகு அவர்கள் ஒரு கட்சிக்கு மட்டும் சொந்தமானவர்களல்ல; எல்லாக் கட்சிக்கும் சொந்தக்காரர்களாகிறார்கள்.


அப்படிப்பட்ட பரந்த மனப்பான்மை எங்களுக்கும் இருப்பதால் தான் தியாகிகளை பொன்னே போல் போற்றி வருகிறோம்.

சென்னையிலே இரண்டு தமிழ்த் தங்கங்கள் தணலில் மூழ்கிச் செத்து புகழின் உச்சிக்கே போய் விட்டார்கள்;

அவர்கள் ஒருவன் தான் திரன் சிவலிங்கம் — இன்னொருவன் அரங்கநாதன்!

திரன் சிவலிங்கம் பெயர் இந்தப் பாலத்திற்கு சூட்டி விட்டோம்.

கண்ணம்மா பேட்டையில் கட்டப்படும் அந்தப் பாலத்திற்கு அரங்கநாதன் பெயர்



சூட்ட மாநகராட்சி நடவடிக்கைகள் வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்:

தியாகிகளைப் பாராட்ட நாம் கற்றுக்கொள்ள வேண்டும் — அவர்களைக் போற்றிடக் கற்றுக்கொள்ள வேண்டும். தியாகிகளுக்கு வீர வணக்கம் செலுத்தும் மரபை நாம் பேணிக் காக்க வேண்டும்—என்ற அடிப்படையில்தான் தி. மு. கழகம் தியாகிகளை மதித்து வருகிறது.

நான் உழைப்பது; மற்றவர்கள் பதவி பெறுவதா? அவர் மந்திரியாக நான் உழைப்பதா? அவர் சட்ட மன்ற உறுப்பினராக நான் உழைப்பதா? மாநகராட்சி உறுப்பினராக நான் உழைப்பதா? எனக்கென்ன கிடைக்

(10ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




க. கோடீஸ்வரன்,
கொழும்பு 12:

கே: தமிழரசுக்கட்சி அரசியல் நிர்ணயசபைக்குச் சென்றது ஏன்? தமிழினத்தின் கோரிக்கைகளை அரசாங்கம் வழங்கப்போகிறது என்ற மூடநம்பிக்கையுடனா? அரசாங்கத்தின் சதித் திட்டத்தை அரசியல் அனுபவம் மிக்க தமிழரசுக்கட்சித் தலைவர்களால் முன்கூட்டியே உணர முடியாமல் போய்விட்டதா? அப்படி உணர்ந்திருந்தால் துவக்கத்திலேயே அ. நி. சபையைப் பகிஷ்கரித்திருக்கலாமே!

ப: தமிழரசுக்கட்சி அரசியல் நிர்ணயசபைக்கு தமிழினத்தின் உரிமைகளையெல்லாம் அரசு வாரி வழங்கப் போகிறது என்று மூடத்தனமாக எதிர்பார்த்துப் போகவில்லை; அந்த அளவுக்குச் சிங்களத் தலைவர்களின் நாடியை பிடித்துப் பார்க்கத் தெரியாத அரசியல் அறிவிலிகள் அல்ல தமிழரசார்: இருந்தும் நாட்டின் பிரதமர் என்ற ரீதியில்—''அரசியல் நிர்ணய சபைக்கு வாருங்கள்; உங்கள் கோரிக்கைகளைச் சமர்ப்பியுங்கள்: அவற்றை கட்சி அடிப்படையில் அல்லாமல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் முறையில் நட்புரீதியில் கூடிப்பேசி இணக்கத்துக்கு வருவோம்''—என்று திருமதி பண்டாரநாயகா அழைப்பு விடுத்தபோது காந்தியக் கொள்கைகளைப் பின்பற்றுகிறவர்கள் என்கின்ற முறையில் அந்த அழைப்புக்கு மதிப்புக் கொடுத்து அ. நி. சபைக்கு தமிழரசார் சென்றனர்; தமது கோரிக்கைகள் மறுக்கப்பட்டபோது போதுமான காரணங்களைக் காட்டி அதிலிருந்து வெளியேறினர்.

தமிழரசார் அ. நி. சபைக்கு ஆரம்பத்திலேயே போகாமல் அதைப் பகிஷ்கரித்திருந்தால்—சிங்கள அரசு என்ன சொல்லியிருக்கும்? தமிழ்ப் பிரதிநிதிகளை அழைத்து பேசி தமிழர்களின் உரிமைகளை வழங்க நாம் தயாராகத்தான் இருந்தோம்! ஆனால் தமிழரசார்தான் முரண்டு பண்ணிக்கொண்டு எம்முடன் ஒத்துழைக்க மறுத்துவிட்டார்கள்; என்று கூறி உலகத்தின் கண்களில் நல்ல பிள்ளை போல தன்னைக் காட்டியிருக்கும்; ஆனால் இப்போதோ அ. நி. சபையில் பங்கு பற்றி தமிழுரிமைகளுக்காக எவ்வளவோ விட்டுக் கொடுத்து வாதாடிப்பார்த்தும், அவற்றில் ஒன்றைக்கூட அரசாங்கம் ஏற்க மறுத்து விட்டதால்தான், தமிழரசுக்கட்சியினர் அச்சபையிலிருந்து வெளியேறியிருக்கிறார்கள் என்ற உண்மையை உலகு அறிந்து விட்டது. தமிழரசாரின் அ. நி. சபை பிரவேசமும் அதிலிருந்து அவர்கள் வெளியேறியதுமான செயல்கள் சிங்கள ஆட்சியின் குரூர இனவெறிப் போக்கையும், தமிழர்களின் நியாயமான சாத்வீகப் போக்கையும் உலகம் உணர்வதற்கு ஒரு வாய்ப்பாகிவிட்டது.

எனவே தமிழரசார் அ. நி. சபைக்குச் சென்றதும் அதிலிருந்து தக்க தருணத்தில் வெளியேறியதும் முற்றிலும் சரியான நடவடிக்கைகளே யாகும்!

ஃ

ராஜன் சிவா,
கொட்டடி,
யாழ் நகர்.

கே: அஞ்சா நெஞ்சன் சாவகச்சேரி பாராளுமன்ற உறுப்பினர் வ. ந. நவரத்தினத்தின் பிறந்த நாள் எப்போது?

ப: ஜுன் நாலாந் தேதி!

ஃ

மு. தவராசா,
வவுண தீவு.

கே: 'மினி' நாகரிகம் வளர்ந்து எமது தமிழ்ப் பண்பாட்டை முறியடித்து வருகிறது; இது முறைதானா?

ப: இந்தக் கேள்வியை 'மினி' அணியும் 'சனி'யன்களிடம் கேளுங்கள்!

கே: எட்வேட் கென்னடியை அமெரிக்க மக்கள் விரும்புகிறார்களா?

ப: ஜனநாயக உணர்வும், தமது உள்ளம் சரியென்று கருதுவதை யாருக்கும் அஞ்சாமல் எடுத்துச் சொல்லும் துணிச்சலும், இளமையும் சுறுசுறுப்பும் மிக்கவர் எட்வேட். இவரை விரும்பாமல் அமெரிக்க மக்கள் வேறு யாரை விரும்புவது?

ஃ

இ. ஜெயராசா,
திருகோணமலை:

கே: எங்கள் 'கலப்புச் சாதித் தமிழர்' உண்மையில் தமிழரா?

ப: அவரது அன்னைக்குத்தான் 'அது' வெளிச்சம்!

ஃ

பே. தி. இரத்தினம்,
குருணகல்.

கே: தமிழ் அமைச்சரின் நிர்வாகத்தின் கீழ் இன்னும் தமிழ் இடங்களில் பொறிக்கப்படும் அலுவலக முத்திரை சிங்கள மொழியில் இருப்பதன் காரணம் என்ன?

ப: தமிழ் மக்களின் தொண்டைக்குள் சிங்களத்தை திணிப்பதற்காகத் தானே அவர் மந்திரியாயிருக்கிறார்!

க. மு. மாறன்,
யாழ்ப்பாணம்:

கே: மீண்டும் அறிக்கை விட்டு, சங்கரி சிங்கள அரசுக்கு பபூன் விளையாட்டு காட்டுகிறாரா? அல்லது தன்னைப்போல் திறமையாக கால் கழுவி எச்சில் இலை நக்கி அரசியல் நடாத்த வேறு வெட்கம் கெட்ட தமிழர் கிடையாதென்று சொல்லிக் காட்டுகிறாரா?

ப: எட்டப்பன் இப்போது தனது உருவத்தில் உயிர் வாழ்ந்து கொண்டிருப்பதை இப்படி எடுத்துக் காட்டியிருக்கிறார் ஆனந்தசங்கரி!

ஃ

கனக சபை,
இணுவில்:

கே: தமிழரின் வர்த்தக ஸ்தாபனங்களில் ஆங்கிலப் பெயரை அந்த உச்சரிப்புடன் தமிழிலும் எழுதுகிறார்களே தூய தமிழைப் பாவித்தால் என்ன?

ப: பாவித்தால் என்னவா? நிச்சயம் தூய தமிழே பயன்படுத்தப்படவேண்டும்: அந்த வகையில் தமிழ் வணிகர்களை தமிழ்த் தொண்டர்கள் தூண்டவேண்டும்!

ஃ

சி. பெ. மனோகரன்,
நுகேகொடை.

கே: "இரும்பு மனிதன்" இன்று உயிரோடு இருந்திருந்தால்......?

ப: தமிழ் நாட்டு பத்திரிகை இறக்குமதி தடையை எதிர்த்து போர்க்குரல் எழுப்பியிருப்பார்!

ஃ

எஸ். பி. சுந்தரலிங்கம்,
நெடுந்தீவு.

கே: மனிதன் எப்போது மிருகமாகிறான்?

ப: மனிதத் தன்மையை இழந்துவிடும்போது!

ஃ

எஸ். ஜே. ரூபேந்திரன்,
பருத்தித்துறை:

கே: பருத்தித்துறை பாராளுமன்ற உறுப்பினர் திரு. க. துரைரத்தினம் இப்போது எங்கே? பேச்சு மூச்சையே காணோமே!

ப: உஸ்ஸ்ஸ்...! மெதுவாகக் கேளுங்கள்: பலமாக கேட்டால் அவரது அமைதியான சட்டப்படிப்புக்கு குந்தகம் ஏற்பட்டு விடும்!

கே: காவடித் தியாகராசாவின் தொழில் என்ன?

ப: அதுதான் காவடி எடுப்பது — அமைச்சர்களுக்கும் ஆளுங்கட்சி வால்களுக்கும்!

ஃ

மு. க. சூரியன்
கோப்பாய்

கே: எம். ஜி. ஆர். படங்களை வைத்திருப்பதும் ஒரு குற்றமா, ஏன் அட்டன் எம். ஜி. ஆர் ரசிகர் மன்ற தலைவர், செயலாளர், பொருளாளர் இவர்களை பொலிசார் கைது செய்ய வேண்டும்?

ப: என்ன செய்வது? தி. மு. க. என்கின்ற மூன்றெழுத்து நமது ஆட்சியாளரை கெடிக்கலக்கமடைய செய்கிறதே!

வெட்டி ஒட்டப்பட வேண்டிய முகவரி—

திருவாளர்
குயுக்தியார்
மே/பா. சுதந்திரன்
194ஏ, பண்டாரநாயக்கா வீதி
கொழும்பு—12

# தமிழ் மக்கள் மனச்சாந்தி பெற முடியாமல் தடைபோடலாமா தபாலமைச்சரே!

திடீர் அமைச்சர் குமாரசூரியரும் 'அசட்டு மூளை' வி. பொன்னம்பலமும் (தமக்கு அசட்டு மூளையென்பதை 10-10-71 தினகரன் கட்டுரையில் திரு. வி. பீ. யே ஒப்புக்கொண்டுள்ளார்) தமிழ் நாட்டை அந்நிய நாடாக கருதுபவர்கள்!

தமிழ்நாட்டு மக்களை 'அந்நிய' மக்களாக நினைப்பவர்கள்!

தமிழ்நாட்டுக்கலைகளை, கலாச்சாரத்தை, நாகரிகத்தை, சமயத்தை, யாவற்றையும் அந்நியமாகவே கருதிவருபவர்கள் இவர்கள்!

தமிழ்நாட்டு பத்திரிகைகள், சஞ்சிகைகள், நூல்கள் யாவும் அந்நிய நூல்கள்; அவை தடைசெய்யப்படவேண்டும்; அப்போதுதான் 'ஈழத்தின் தனித்துவம்' பாதுகாக்கப்படும் என்று கூச்சலிடுபவர்கள் இவர்கள்!

தமிழ்மொழியைக்கூட 'அந்நிய' மொழியாகவும், சிங்களமொழிமட்டுமே இந்நாட்டின் தேசியமொழியென்றும் இவர்கள் உள்ளூரக்கருதினாலும் ஆச்சரியமில்லை!

அப்படிப்பட்ட இவர்கள் 'வெள்ளி' தீபாவளி இதழில் கூறியிருக்கும் கருத்துக்களை படித்தபோது, இவர்கள் தமிழ் மக்களை எப்படி முட்டாள்களாக்குகின்றனர் என்ற உண்மை தெளிவாகிறது!

நீங்கள் அதிகமாக விரும்பிப்படிக்கும் தமிழ் சஞ்சிகைகள் எவை என்ற கேள்விக்கு குமாரசூரியர் பின்வருமாறு பதிலளித்திருக்கிறார்:

''இப்போது தினசரிப்பத்திரிகைகளைத்தவிர மற்றும் சஞ்சிகைகளைப் பிடிப்பதற்கு நேரம் கிடைப்பதில்லை. எனினும் கலை, கலாசாரம், இந்துமதம் சம்பந்தமான ஆராய்ச்சிக்கட்டுரை வெளியாகியிருந்தால்-அவற்றை ஆர்வத்துடன் படிப்பதுண்டு. மேலும் மனம் குழம்பிய நேரத்தில் கவலையுற்றிருக்கும்போது மனநிலையைப் புதுப்பிக்கும் எண்ணம் கொண்டு பழைய புராண இதிகாசங்களைப் படிப்பேன்; பழந்தமிழ் அல்லது பாட்டு ரூபத்தில் அமைந்துள்ள இவற்றைப் படிப்பதால் மனதில் சாந்தி ஏற்படுகிறது. மனச்சாந்தியை தேடி இவற்றைப் படிக்கும்போது தமிழறிவையும் பெற்றுக்கொள்ள முடிகிறது''

—இவ்வாறு கூறியிருக்கிறார் குமாரசூரியர்!

நாங்கள் குமார சூரியரிடம் கேட்கிறோம்!

ஐயா குமாரசூரியரே! தமிழ்நாட்டை அந்நிய நாடாக கருதுபவர் நீங்கள்; தமிழ்நாட்டு நூல்கள், பத்திரிகைகள் இங்குவரக்கூடாது என்று தடைசெய்துள்ள 'மகான்' நீங்கள்; அப்படிப்பட்ட நீங்கள் மனச்சாந்திக்காக தமிழ்நாட்டு பழைய புராண இதிகாசங்களை எப்படிப் படிக்கலாம்? ஈழத்துக்கு ஏதோ 'தனித்துவம்' இருப்பதாக கதையளக்கிறீர்களே. அந்த 'தனித்துவத்தால் இங்கு உருவான ஏதாவது ''புராண இதிகாசங்கள்'' இருந்தால் அவற்றைப் படித்து மனநிறைவு பெறுவது தானே! அப்படி உருவானது என்று ஒன்றையாவது விரல்மடித்துக் கூறுவீர்களா?

ஆக, உமக்கு மனநிறைவும், மனச்சாந்தியும் தரக்கூடியசக்தி தமிழ்நாட்டின் பழந்தமிழ் இலக்கியங்களான புராண இதிகாசங்களுக்கேயுண்டு என்பதை இப்படி 'வெட்கத்தை' விட்டு ஒப்புக்கொள்ளுகிறீரே... அப்படிப்பட்ட நீங்கள் தமிழ்நாட்டு ஏடுகளையும் நூல்களையும் இங்குவரவிடாமற் தடைசெய்வது நீதியானதுதானா? நேர்மை நிறைந்ததா?

உமக்கு பழைய புராண இதிகாசங்கள் மனச்சாந்தியை தருவதுபோல — இந்நாட்டு இலட்சக்கணக்கான தமிழ்மக்கள் அறிஞர் அண்ணாவும், கலைஞர் கருணாநிதியும் ராஜாஜியும், ஜெயகாந்தனும், அகிலனும், கி. வா. ஜகநாதனும் தீபம்பார்த்தசாரதியும், ஜானகிராமனும், விகடன் மணியனும் பரணீதரனும், காஞ்சிப் பெரியவரும், குன்றக்குடி அடிகளாரும் கிருபானந்தவாரியாரும் எழுதும் எழுத்துக்களைப்படிப்பதால் மனச்சாந்தியும் தமிழறிவும் பெறலாமல்லவா? இந்நாட்டு தமிழ் மக்களுக்கு அந்த மனச்சாந்தி கிடைக்கவிடாமல் எதற்காக தடைபோடுகிறீர்கள்? தமிழ்நாட்டு பத்திரிகை, சஞ்சிகைகள் நூல்களுக்கு எதற்காக தடைவிதிக்கிறீர்கள்?

இதேபோல—'மார்க்சு எழுதிய மூலதனம் என்ற நூலை தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டிருந்தார் பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரை. அவரது நூலைப்படித்தே நான் 'கம்யூனிஸ்ட்' ஆனேன்; மனிதன் ஆனேன்' என்று கூறியிருக்கிறார் வெள்ளி இதழில் மற்றோர் 'பத்திரிகைத்தடை' வீரரான வி. பி!

பன்மொழிப்புலவர் அப்பாதுரையார் நூற்றுக்கணக்கான ஆராய்ச்சி நூல்களையும் ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் தந்துகொண்டிருப்பவர். திராவிட இனத்தின் மிகப் பழைய வரலாற்றையும், தமிழ்மொழியின் பழமையையும் தனக்கேயுரிய தமிழ் நடையில் பல நூல்களில் எழுதியுள்ளார். அப்பாதுரையாரின் மொழிபெயர்ப்பு நூல் ஒன்றைப்படித்து, மனிதர் ஆனேன்' என்று பெருமைப்படும் 'வி. பி.' யாரோ! அப்பாதுரையாரின் சொந்தநூல்களான திராவிட ஆராய்ச்சி நூல்களைப் படித்து இந்நாட்டுத்தமிழர்கள் 'தமிழர்கள்' ஆக வேண்டாமா? அதற்குக்குறுக்காக ஏன் நீங்கள் நிற்கிறீர்கள்? நீங்கள் மனிதன் ஆனால் போதுமா? ஏனையோர் மனிதர்கள் ஆகவேண்டாமா?

'தடை வீரர்களே' மீண்டும் சிந்தியுங்கள்!

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தகச் செல்வரைப் போ



## பெரியவரின் ஆசி!

வாசிப்பு ஒருவனை முழு மனிதனுக்குகிறது என்று ஆங்கிலத்திலே ஒரு பழமொழி கூறுவார்கள், நல்ல புத்தகங்களே மனிதனின் உண்மையான நண்பர்கள்.

நல்ல தமிழ் புத்தகங்களை இந்நாட்டுத் தமிழ் மக்களிடம் பரப்பி விற்பனை புரிந்து வரும் ரகுநாதன் பதிப்பகத்தார் யாழ்ப்பாணத்திலும் தங்கள் கிளையொன்றை நிறுவ முன் வந்தது பாராட்டுக்குரியது.

ரகுநாதன் பதிப்பகத்தாரின் பணி சிறக்க வாழ்த்துகிறேன்.

சா. ஜே. வே. செல்வநாயகம்,
பா, உ.

'புத்தகச் செல்வர்' பத்மநாதன் அவர்களை நான் மன நிறைவோடு எண்ணிப் பார்க்கிறேன். மூன்று ஆண்டுகளுக்கு முன்பு என்று நினைவு அப்பொழுது 'ரகுநாதன் பதிப்பகம்' என்று ஒரு பதிப்பகம் இல்லை. ஈழத்தில் உள்ள எல்லா வணிகச் செல்வர்களையும் போல அவரும் ஒரு சாதாரண செல்வராகவே இருந்தார். அந்த வேளையில்தான் நான் அவரை நெருங்கினேன். என்னுடைய கையில் 'தமிழன் கனவு' கவிதை நூலின் கையெழுத்துப் பிரதி இருந்தது.

பத்து ஆண்டுகளுக்கு முன்பு சிங்கள இனவெறி அரசின் கொடுமைக்குப் பலியானதன் விளைவாய்-இரத்த வாந்தி எடுத்து-உடல் நலம் குன்றிய நிலையில் மட்டக்களப்பு மருத்துவ விடுதியில் நான் ஓராண்டுகாலம் தங்கியிருக்க நேர்ந்தது. அந்த நேரத்தில்படுக்கையில் கிடந்தபடியே நான் எழுதிய கவிதை நூலே 'தமிழன் கனவு' ஆகும். என்னுடைய இரத்தத்தோடு பிறந்த அந்தக் கவிதைச் செல்வத்தை எப்படியோ அச்சேற்றி வெளியிட வேண்டும் என்ற ஆசையை நிறைவேற்ற திரு. பத்மநாதன் அவர்களை நாடினேன்: அவரை எனக்கு அறிமுகம் செய்து வைத்தவர் இன்று 'ரகுநாதன் பதிப்பகத்தின்' நிருவாகியாக இருக்கும் நண்பர் செல்வராஜ் அவர்களே!

'பணத்தை நீங்கள் மட்டும் வைத்துக்கொண்டிராமல் தமிழுக்கும் கொஞ்சம் தாருங்கள்' என்று நான் திரு. பத்மநாதன் அவர்களிடம் சொன்னேன். 'என்ன செய்யலாம்?' என்று கேட்டார் அவர். 'ஒரு பதிப்பகத்தை ஆரம்பிப்போமே!' என்று சிரித்துக்கொண்டே இடையில் குறுக்கிட்டார் நண்பர் செல்வராஜ். 'சரி, அப்படியே செய்வோம்' என்று தாமதமின்றி முடிவெடுத்தவராய் சுடச்சுட 'ரகுநாதன் பதிப்பகத்தை' தொடங்கினார் திரு. பத்மநாதன்; ரகுநாதன் பதிப்பகத்தின் முதல் நூலாக 'தமிழன் கனவு' வெளிவரலாயிற்று! இதுதான் 'ரகுநாதன் பதிப்பகம்' பிறந்த கதை!

தமிழகத்தில் இருந்து தமிழ் நூல்களை இறக்குமதி செய்தும்; ஈழத்தில் வெளியாகும் தமிழ் நூல்களை விலைக்குப் பெற்றும், ஈழத் தமிழர் இடையே குறைந்த விலைக்கு அவற்றை விற்பனை செய்வதன் மூலம் தமிழ் பரப்பும் ஒரு தனித் தமிழ்த் தொண்டு ரகுநாதன் பதிப்பகத்தின் அடுத்த பெரும் பணியாக அரும்பிற்று! திரு. பத்மநாதன் 'புத்தகச் செல்வர்' ஆனார்!

ஈழத்தில் பெரும்பாலான தமிழ்ச் செல்வந்தர்கள் இருக்கிறார்கள். அவர்களில் பலர் தமிழுக்கு காசு தர அஞ்சுபவர்களே! தமிழுக்கு காசு கொடுத்தால்—தமிழை வாழ வைப்பதற்குப் பணம் செலவு செய்தால்—தங்கள் வியாபார 'கோட்டா' பறிமுதலாகிவிடுமோ என்று தயங்கும் தமிழ்ப் பணத்தரே ஈழத்தில் ஏராளம்! 'புத்தகச் செல்வர்' பத்மநாதன் இந்தப் பணக்காரரிடையே முற்றிலும் ஓர் விதிவிலக்காய் நம் கண்முன் தோன்றுகிறார்!

கையில் இருந்த பணத்தை கப்பலாய்க் கடலில் ஓட்டி விட்டு—சிறையிலே செக்கிழுத்த சிதம்பரனார் போல வாழா விட்டாலும்-அரசாங்கத்துக்குத் தெ[illegible]ாமல் மறைவாக தமிழின[illegible]துக்கு

### காசி. ஆனந்தன்

காவலர்; தமிழ் தாய் மன்றம்

நிதி உதவி அளித்து விடுதலை இயக்கங்களை வளர்த்துவிட் ஆவது ஈழம் வாழ் தமிழ்ப் பணக்காரருக்குத் தெரிந்திருக்க வேண்டும். மானம் கெட்டவர்களாக — தங்கள் மணித்தமிழை மறந்தவர்களாக—மாற்றாருக்கு காலம் முழுதும் 'ஐயா' போடும் மகா அடிமைகளாக ஈழத்

## ஈழத்தின் தமிழ்ப் பு

## ரகுநாதன் புத்தகப்

### தமிழுக்கு ஒரு நிழல்!

சிந்தனைக்கு விருந் தளிக்கும்
சீருடைய பொருள் விளக்கும்
சந்த முடை கவி பாடும்
சரளமாய்க் கதை சொல்லும்
முந்துதமி ழெழில் விள்ளும்
மூத்தனைய நூல் நல்கும்
வந்தனைக் குரிய தெங்கள்
வணிக இரகுநாத நிலையம்!

நாவலர் படைப்பை யெல்லாம்
நாட்டினிற் பரப்பி யெங்கள்
பாவலர் தமிழை அச்சிற்
பதிக்கின்ற பணியுஞ் செய்து
ஏவலராகி நின்றார்
இரகு நாதன பதிப்பகத்தார்
காவலர் அவரே என்போம்
கனித் தமிழ் நூலுக் கெல்லாம்!

—காவலூர் சிவன்.

ரகுநா

பதிப்ப

ரகுநாதன் பதிப்பகம் — ரகுநாதன் பதிப்பகம் — ரகுநாதன் பதிப்பகம்
ரகுநாதன் பதிப்பகம் — ரகுநாதன் பதிப்பகம் — ரகுநாதன் பதிப்பகம்
ரகுநாதன் பதிப்பகம் — ரகுநாதன் பதிப்பகம் — ரகுநாதன் பதிப்பகம்
ரகுநாதன் பதிப்பகம் — ரகுநாதன் பதிப்பகம் — ரகுநாதன் பதிப்பகம்
ரகுநாதன் பதிப்பகம் — ரகுநாதன் பதிப்பகம் — ரகுநாதன் பதிப்பகம்

தித்திக்கும்

தமிழ் புத்தகங்கள் வேண்டுமா?

- நாவலா?
- சிறுகதைத் தொகுப்பா?
- கவிதை நூலா?
- ஆராய்ச்சி நூலா?
- தத்துவப் புத்தகமா?
- சமய நூலா?
- பெரியார் வரலாறு?

— கிடைக்குமிடம் —

ரகுநாதன் பதிப்பகம்

303, காலி வீதி,
கொழும்பு-3.

302, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.


ரகுநாதன் பதிப்பகம் — ரகுநாதன் பதிப்பகம் — ரகுநாதன் பதிப்பகம்
ரகுநாதன் பதிப்பகம் — ரகுநாதன் பதிப்பகம் — ரகுநாதன் பதிப்பகம்
ரகுநாதன் பதிப்பகம் — ரகுநாதன் பதிப்பகம் — ரகுநாதன் பதிப்பகம்
ரகுநாதன் பதிப்பகம் — ரகுநாதன் பதிப்பகம் — ரகுநாதன் பதிப்பகம்
ரகுநாதன் பதிப்பகம் — ரகுநாதன் பதிப்[illegible]

## அதிசயப் பிறவி பத்ம

நாவலர் நூல்கள் கிடைக்க முடியாதிருந்த பற்றாக்குறையை நிறைவுசெய்ய உரிய காலத்தில் கைகொடுத்து உதவியதுதான் ரகுநாதன் பதிப்பகம். உண்மையிலேயே புத்தக வியாபாரத் துறையில் ஒரு துணிகரமான வீரச் செயல்.

1969 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில், நாவலர் நூல்கள், நாவலர் உபயோகித்த கருவிகள், உத்திராக்கம், பட்டுச்சால்வை முதலியன கொண்ட பொருட்காட்சியினை நாவலர் சபை ஒழுங்கு செய்தது: அங்கே மண்டபத்தின் ஒரு பக்கத்தில் ரகுநாதன் பதிப்பகம் நாவலர் நூல்களை விற்பனை செய்வதற்காக, புத்தகசாலையொன்றினைத் தற்காலிகமாக ஏற்படுத்தியிருந்தது; இந்தப் புத்தகசாலையில் வைக்கப்பட்டிருந்த நூல்களை ஒருமுறை கண்[illegible]ட்டம் விடுவதற்காகச் சென்றேன்: அங்கே மெய்கண்டான் அதிபர் திரு. நா. இரத்தினசபாபதி அவர்கள் "ரகு[illegible]தன் பதிப்பக" அதிபர் பத்மநாதன் அவர்களை எனக்கு அறிமுகம்செய்து வைத்தார்கள்.

என்னிடமிருந்த "சிதம்பர மான்மியம்" என்ற நூலினை



அறிஞர் அண்ணா அவர்களின் உருவச் சிலை வேண்டுமா?

தொடர்பு கொள்ளுங்க[illegible]
சோமசுந்தரம்,
105, டீனஸ் ரோட், மருதா[illegible],
கொழும்பு-10.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போற்றுவோம்!

ருந்த பணத்தை
கடலில் ஒட்டி
ுயிலே செக்கிழு
பரனர் போல
ாலும்-அரசாங்
தெ[illegible]ாமல்
தமிழின[illegible]துக்கு

தமிழ்ப் பணக்காரரர் வாழும் நிலை மாறவேண்டும்—இதனை ஒளிவு மறைவின்றி இவ் வேளையில் கூறிவைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். 'ரகுநாதன் பதிப்பகத்தினர்' ஒருபெரும் தமிழ் விடுதலை இயக்கத்துக்கு உதவுகிறவர்களாக இல்லாவிட்டாலும்—தமிழ் எழுத்தாளர்களையும் வாசகர்களையும் மதித்து தம் மால் முடிந்த தமிழ்ப் பணியினை ஆற்றிவருகிறார்கள்—நாம் புத்தகச் செல்வரைப் போற்றுவோம்!

ஈழத்தின் பாரி இரத்தின சபாபதி அவர்கள் 'மெய் கண்டான்' நாள் காட்டிகளில் தமிழைப் பரப்பும் ஒரு புதிய பணியை ஈழத்தில் தொடங்கினர். திருக்குறளும் தமிழ்ப்பெரியார் திருமொழிகளும் தாங்கி அவரது நாள் காட்டிகள் புதுமையாக நாட்டிலே உலா வந்தன. பொருள் சேர்க்கும்போதும் தமிழ் பரப்பிப் பொருள் சேர்த்த இரத்தினசபாபதி அவர்கள் அவ்வாறு சேர்த்த பொருளையும் தமிழுக்குப் பெரும் அளவில் தந்தார். ஈழத்தின் பாரி இரத்தின சபாபதி அவர்களின் வழியில் இன்று ரகுநாதன் பதிப்பக உரிமையாளர் 'புத்தகச் செல்வர்' பத்மநாதன் அவர்கள் நடைபோடுவது ஈழத் தமிழினத்துக்கு நல்ல காலமே!

'புத்தகச்செல்வரின்' பெரும்பணி தொடர்க! 'ரகுநாதன் பதிப்பகம்' வாழ்க! என வாழ்த்துவோம்!

## ஆனந்தன்

மிழ் தாய் மன்றம்

அளித்து விடுதலை
வளர்த்துவிட்
வாழ் தமிழ்ப்
க்குத் தெரிந்தி.
டும். மானம்
ளாக — தங்கள்
ழ மறந்தவர்
ருருக்கு காலம்
யா' போடும்
களாக ஈழத்

# தமிழ்ப் பூஞ்சோலை புத்தகப் பண்ணையே!

# ரகுநாதன் பதிப்பகம் மலர்



ரகுநாதன் பதிப்பக உரிமையாளர் புத்தகச் செல்வர்
திரு. க. பத்மநாதன் அவர்கள்

# முத்தமிழ் யாழ் நாட்டில் ரகுநாதன் பதிப்பகத்தின் புத்தகப் பண்ணை!

இத்தனை காலமும் கொழும்பில் இருந்து தமிழ்ப் புத்தகங்களை யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச் சென்று மக்களிடையே அவற்றை குறைந்த விலைக்கு வழங்கி வந்த ரகுநாதன் பதிப்பகத்தார் இப்போது யாழ்ப்பாணத்துக்கென ஒரு தனிப் புத்தகப் பண்ணையைத் திறந்திருக்கிறார்கள்.

தமிழகத்தில் இருந்து தரமான தமிழ் ஏடுகளைத் தருவித்து யாழ்ப்பாணம் வாழ் தமிழ் மக்களுக்கு வழங்கும் பணி இனி சுறுசுறுப்பாக நடைபெறும் என எதிர் பார்க்கலாம். அத்தோடு ஈழத்து எழுத்தாளர் தம் தமிழ்ப்படைப்புக்களை வட ஈழத்தில் வெகுவாகப் பரப்பும் முயற்சியிலும் ரகுநாதன் பதிப்பகத்தார் ஈடுபடுவார்கள் போலும்!

யாழ்ப்பாணத்தில் உள்ள ரகுநாதன்பதிப்பகம் புத்தகப்பண்ணையில் ஏனைய நூல்களோடு பாடசாலை மாணவர்களுக்கான தமிழ்ப் பாடநூல்களும் குழந்தைகளுக்கான இலக்கியங்களும் விற்பனைக்கு வைக்கப்படுமாம்;

தமிழ்த் தலைவர்கள் பெரியார்கள் ஆகியோரின் பிறந்தநாள் மறைவு நாள் போன்ற குறிப்புகளுடனும் திருக்குறள் அடிகள் தமிழறிஞர் பொன் மொழிகள் ஆகியவற்றுடனும் கூடிய நாள் காட்டிகள் (கலண்டர்கள்) நாள் குறிப்புக்கள் (டயறிகள்) ஆகியனவும் யாழ்ப்பாணம் ரகுநாதன் பதிப்பகப் புத்தகப்பண்ணையில் விற்பனைக்குக் கிடைக்கும் என ரகுநாதன் பதிப்பக நிருவாகி தெரிவிக்கிறார்.

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் 302ம் இலக்கத்தில் அமைந்துள்ள ரகுநாதன் பதிப்பகத்தின் புத்தகப்பண்ணை மொத்தத்தில்ஒரு தமிழ்பரப்பும் நிலையமாக விளங்கும் என்று எதிர் பார்க்கலாம்!

# [illegible]வி பத்மநாதன்!

ங்கே மண்டபத்
க்கத்தில் ரகு
பகம் நாவலர்
ற்பனை செய்
புத்தகசாலை
தற்காலிக
த்தியிருந்தது;
ுத்தகசாலையில்
ருந்த நூல்களை
கண்டேன்
ச் சென்றேன்;
ண்டான் அதி
இரத்தினசபா
ர் "ரகு[illegible]தன்
அதிபர் பத்ம
ர்களை எனக்கு
ப்து வைத்தார்

ந்த "சிதம்பர
என்ற நூலினை

என் நண்பர் ஒருவர் இரவலாக எடுத்துக்கொண்டு போய், நான் அதை மறக்கும்வரையும் வைத்திருந்து, இப்பொழுது அதனைச் சொந்தமாக்கிக்கொண்டார்; நூல் ஒசிலே சேர்க்கும் தந்திரத்தில் என் நண்பர் பேர்பெற்றவர். 'சிதம்பர மான்மியம்' என்ற நூலினை யான் வாங்கிக்கொண்டு வீடு திரும்பினேன்.

"ரகுநாதன் பதிப்பகம்" நல்லூரில், மகோற்சவ காலத்தில், நாவலர் மணிமண்டபத்துக்கண்மையில், தற்காலிகமாக ஒரு புத்தகசாலையை அமைத்து, சமய நூல்களை விற்று அருந்தொண்டாற்றி வருகின்றது. இதனை யான் இம்முறை கண்ணாரக்கண்டு மட்டற்ற மகிழ்ச்சி எய்தினேன். நல்லூர் தேவஸ்தானம் வெளியிட்ட "நல்லூர்க் கந்த சுவாமி" என்ற நூலின் 800 பிரதிகளைத்தாம் மகோற்சவ காலத்தில் விற்றுவிட்டதாகப் பெருமிதத்துடன் [illegible]றினர். யாழ்ப்பாணத் தமிழனுடைய தமிழ் நூல் வாங்கும் அபிமானம் இன்னும் முற்றாகச் செத்துவிடவில்லை. அதனை நன்கு, பயன்படுத்தி வளர்த்துவரும் நிறுவனம் "ரகுநாதன் பதிப்பகமே"!! யாழ்ப்பாணத்திலேயே ஒரு கிளையினை ஏற்படுத்த முன் வந்த திரு. பத்மநாதனின் செயல் பாராட்டத்தக்கது.

வாழ்க பல்லாண்டு "ரகுநாதன் பதிப்பகம்."

வாழ்க நாவலர் பதிப்பு நூல்கள்.

முதலியார்
**குல. சபாநாதன்**

[illegible]ண்ணு
[illegible]ன் உரு
வேண்

[illegible]ளுங்க[illegible]
[illegible]ரம்,
[illegible]மருதா[illegible],
[illegible]-10.

## சுதந்திரன் ஆசிரியர் வாழ்த்துகிறார்!

தமிழுக்கு தொண்டு செய்வோர்சாவதில்லையென்று கூறினர் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்.

ஆம், உண்மைதான்! தமிழுக்கு தொண்டுசெய்யும் புத்தகச் செல்வர் பத்மநாதனும் சாகாவரம் பெற்றவர்.

தமிழுக்குத் தொண்டுசெய்வதற்கு பல வழிகள் உண்டு. எழுதுவதும் பேசுவதும் மட்டுமே தமிழ்த் தொண்டு ஆகாது!

நல்ல தமிழ் நூல்களை மக்களிடம் பரப்பி—அவற்றை வாங்கக்கூடியதாக அவர்களிடையே ஆசையை ஊட்டி—அதிக இலாபம் இன்றி புத்தக விற்பனைப் பணியாற்றுவதும் நல்ல தமிழ்த்தொண்டுதான்!

நல்ல தமிழ் நூல்கள் மக்களிடம் பரவுவதற்கு ஏற்றமுறையில் பணியாற்றக்கூடிய ஆற்றல் புத்தக வணிகர்களிடம் இருக்கவேண்டும்.

அந்த ஆற்றல் நமது ரகுநாதன் பதிப்பக உரிமையாளரிடம் நிரம்ப உண்டு.

நண்பர் பத்மநாதனின் சேவையால் நல்ல தமிழ் நூல்கள் பல இப்போது பல தமிழர்களின் வீடுகளை அலங்கரிக்கின்றன.

புத்தகச் செல்வரின் தமிழ்ப்பணி மேலும் சிறக்க வாழ்த்துகிறேன்.


வெளிவருகிறது...

உணர்ச்சிக் கவிஞர்
**காசி ஆனந்தன்**
எழுதிய
**படகோட்டியின் பாடல்**
(தத்துவ நூல்)

- கவிஞரின் சொந்த வாழ்க்கை அனுபவங்கள்
- கவிஞரின் தத்துவத் தமிழ் அமுதம்.

வெளியிடுவோர்:
**ரகுநாதன் பதிப்பகம்**
302, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பத்திரிகைத்தடை- கம்யூனிஸ்டுகளின் திட்டமிட்ட சதி!'

## கவிஞர் சக்தீ பாலையா கண்டனம்!



தென்னகத் தமிழ்ப்பத்திரிகைகள் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குமாறு கவிஞர் திரு. சக்தீ பாலையா தற்கால தலைமை அமைச்சர் திரு. மைத்ரிபால சேனநாயகாவுக்கு எழுதியுள்ளார். மலையக எழுத்தாளர் சென்ற ஆண்டில் சமர்ப்பித்த மகஜரில் கண்டுள்ளபடி தடை விதிப்பினால் ஏற்படும் துர்ப்பாக்கிய நிலைமைகளை திரு. சக்தீ பாலையா சுட்டிக்காட்டியுள்ளார். மலையகத்தில் தமிழ்க் கலாச்சாரம் பெரிதும் பாதிக்கப் படும் எனவும் அந்தக் கடிதத்தில் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.

"தென்னகத் தமிழ்ப் பத்திரிகைகளுக்கு இலங்கை அரசாங்கம் தடை விதித்திருப்பது இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கும் முக்கியமாக மலையகத் தமிழருக்கும் எதிராக எடுக்கப்பட்டிருக்கும் சர்வாதிகாரமானதும், நேர்மையற்றதுமான நடவடிக்கையாகும்.

"ஒழுக்கமிக்க மலையக எழுத்தாளரினதும் மலையக மக்களின் பண்பாடு, சிந்தனை, நோக்கங்கள், கலாச்சார ஈடுபாடுகளைப் பற்றிய எவ்வித அறிவு மில்லாத ஒரு சில கம்யூனிச எழுத்தாளரின் பிழையான ஆலோசனைகளால் இந்தத் தவறு ஓர் இலட்சியமாக்கப்பட்டிருக்கலாம்.

'இந்தத் தடை விதிப்பு கம்யூனிச சந்தர்ப்பவாத எழுத்தாளர்களின் பணச்சேமிப்பு வியாபாரத்துக்கே மிகவும் உதவுமேயல்லாது தமிழ் இலக்கிய வளர்ச்சியை ஏற்படுத்தாது. மேலும் இந்தத் தடை விதிப்பு தமிழ் இலக்கிய வளர்ச்சியையும், ஆத்மீக, சமய எண்ணங்களையும், மலையகத் தமிழ் மக்களின் தனித் தன்மையையும், இறுதி முடிவாக்குவதற்குக் காட்டப்படும், முதலாவது அடையாளமாக எதிரொலிப்பதுடன் உலக அறிவையும், கலாச்சாரத் தொடர்பையும் நசுக்கு வதற்கும் அடிகோலுவதாகும்.

'கம்யூனிசத்தை விட பரந்தநோக்கும், முற்போக்கானதும், சமதர்மக் கருத்துடையதுமே எமது தமிழக கலாச்சாரமாகும். வெளிநாட்டு முற்போக்குக் கொள்கைகள்மூலம் முக்கியத்துவம் பெறநினைக்கும் ஒரு சில சந்தர்ப்பவாத கம்யூனிச எழுத்தாளர்கள் தமிழ் மக்களின் இந்தத் தேசிய முற்போக்குக் கொள்கைகளை நசுக்க முயல்வதையே இந்தத் தடை நடவடிக்கை காட்டுகிறது.

"இந்தத் தடை விதிப்புக்கு எதிரான தமிழ்மக்களின் உரிமைக்குரலை அரசாங்கம் அலட்சியம் செய்திருப்பது மிகவும் துர்ப்பாக்கியமாகும்.

"உலகத்தில் உள்ள எத்தனையோ எண்ணங்களும், கொள்கைகளும், கருத்துக்களும், இந்த நாட்டில் மலர்வதற்கு இடமளித்துள்ள போது, தென்னகத் தமிழ்ப் பத்திரிகைகள் மட்டும் எமது அரசியல் எண்ணங்களில் ஈடுபாடடைகிறது என்று கருதப்படுவதைத்தான் எம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை.

"ஆதலால் தென்னகத் தமிழ்ப் பத்திரிகைகள் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை அகற்ற நடவடிக்கை எடுப்பீர்களானால் அது மாண்புடைய செயலாகக் கருதப்படும்" என்று அந்தக் கடிதத்தில் திரு. சக்தீ பாலையா குறிப்பிட்டிருக்கிறார்.

# தென்னக பத்திரிகை தடையும் ஈழத்தமிழ் இலக்கிய வளர்ச்சியும்!

அண்மையில் நடந்த அனைத்துலக தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் இலங்கைக் கிளையின் சார்பில் கொழும்பில் நடைபெற்ற ஈழத்துத் தமிழ் நூற்காட்சியில் விளம்பரங்களோடு 36 பக்கங்கள் கொண்ட— இலக்கியத்தரம் மருந்தளவும் அற்ற பாமா இராஜகோபாலின் தலைமையமைச்சர் 'சிறீமாவோ' பற்றிய வாழ்க்கை வரலாற்று நூலை தனியே ஒரு தாங்கியில் (Stand) வைத்து ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சி பாரீர்' என்று கூறுவதுபோல் அதன் அருகில் நின்று தனி இன்பம் கண்ட தன்னையும் தமிழையும் விற்கும் கலாநிதி கனகசபாபதி கைலாசபதி அவர்களைக் கண்டு கண்ணீர் விட்டவர்களில் யானும் ஒருவன். இவர்களா ஈழத்தில் இனிய தமிழ் வளர்க்கப் போகிறார்கள்? தன்னலம் விரும்பும் சிலர் தமிழை விற்க விரும்பலாம்: ஆனால் தமிழர் அனைவரும் தமிழை விற்கும் அளவிற்குத் தாழவில்லை என்பதை தாரணி உணரவேண்டும்.

### கைலாசபதியின் நூல்கள் எங்கே பதிப்பிக்கப்பட்டன?

தாயக ஏடுகளைத் தடை செய்யுங்கள் என்று முழங்கும் கணேசலிங்கம், கைலாசபதி, சிவத்தம்பி ஆகியோர் தமது நூல்கள் பலவற்றை பாரி நிலையம் போன்ற தமிழகப் பதிப்பகங்களிலேயே பதிப்பித்துள்ளார்கள் என்பதை அவர்கள் மறுக்கமாட்டார்கள் என்று நம்புகிறேன்.

### ஈழத்து ஏடுகளை தமிழகம் ஏற்கவில்லையா?

ஈழத்து சஞ்சிகைகளை தமிழ் மக்கள் புறக்கணிக்கின்றனர் என்பது அடுத்த குற்றச்சாட்டாகும். ஈழத்துத் தமிழ் ஏடுகளை ஏற்றுமதி செய்வதற்கு தடையாய் இருப்பது இலங்கை அரசாங்கமேயன்றி இந்திய அரசாங்கம் அல்ல. இதையொட்டி சிலகாலத்திற்கு முன் இந்தியத் தூதுவரகம் விடுத்த அறிக்கையை படித்திருப்போர் அறிந்திருப்பர். அண்மையில் சிரித்திரன் இதழின் 2000 படிகள் வேண்டுமென்று தமிழகத்தில் இருந்து வேண்டுகோள் வந்திருப்பதாக யான் அறிகிறேன்.

### குமாரசூரியரின் குதர்க்கம்

சிலகாலத்திற்குமுன் அஞ்சற்துறை அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியர் அவர்கள் 'தென் இந்திய அரசியல் செல்வாக்கு' ஈழத்தில் பரவாதிருக்க இத்தடை வேண்டும் என்று திருவாய் மலர்ந்துள்ளார். இதனின் உட்காரணம் இங்குள்ள சிங்கள அரசாங்கத்தில் தமிழ் இன அழிப்புக் கொடுமைகள் அம்பலத்திற்கு வர 'தமிழக ஏடுகள் துணை நிற்கின்றன என்பதேயாகும். குறிப்பாக அறிஞர் அண்ணாவின் 'Home-land' ல் 'Sinhala Racialism in Ceylon' என்றும் 'இலங்கையில் இன ஒழிப்பு' என்று கல்கியிலும் சில காலத்திற்கு முன்வந்த கட்டுரையும் இலங்கை அரசாங்கத்தின் அட்டூழியங்களை அகிலத்திற்கு அம்பலப்படுத்தின. நெருப்புக் கோழியானது தன்னைத் தப்புவிக்க முயல்வதாக எண்ணி தன் தலையை மண்ணுக்குள் புதைக்கும் மடமையை மிஞ்சும் முறையில் இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன.

### அருகில் உள்ளவன் எதிரி அப்பால் உள்ளவன் அன்பனு?

உருசியாவில் இருந்தும் அமெரிக்காவில் இருந்தும் சீனாவில் இருந்தும் செக்கோசிலேவிக்கியாவில் இருந்தும் 1000,1000 கட்டைகளுக்கு அப்பால் இருந்து சஞ்சிகைகள் இங்கு வரலாம்; இந்நாட்டை தம் கொள்கைகளுக்கு அடிமைப்படுத்தலாம். ஆனால் ஈழத்தின் வடபகுதியில் இருந்து 35 கட்டைகளுக்கப்பால் இருக்கும் தமிழகத்தின் அன்புப் பிணைப்புத்தான் இலங்கை அரசாங்கத்திற்கு பெரும்பேர் ஆபத்தாகத் தோன்றுகிறதுபோலும்!

### தரமற்ற ஏடுகள் தமிழகத்தில் இருந்து வருகின்றனவா?

ஈழத்தமிழரின் பண்பாட்டை கெடுக்கும் அளவிற்கு தரமற்ற சஞ்சிகைகள் தமிழகத்தில் இருந்து ஈழத்திற்கு வருகின்றன என்பது அடுத்து சுமத்தப்படும் குற்றச்சாட்டாகும். தரமற்ற சஞ்சிகைகள் எங்கிருந்து வந்தாலும் அவற்றை யாம் தடுக்கவேண்டும் என்பதில் கருத்து வேற்றுமையில்லை. ஆனால் இங்குள்ள சிலரின் கருத்துப்படி தரமற்ற ஏடுகள் ஆகத் தமிழகத்தில் இருந்துதான் வருகின்றன என்பதேயாகும். அமெரிக்காவில் இருந்தும் பிரான்சில் இருந்தும் மற்றும் ஏனைய மேலை நாடுகளில் இருந்தும் எத்தனையோ ஏடுகள் இங்கு

(10ம் பக்கம்பார்க்க)

## ஈழவேந்தன்

# தமிழக உறவு துண்டிக்கப்படின் எதிர்கால தமிழ் சந்ததி அழியும்!

சமத்துவம், சகோதரத்துவம் சமநீதி என்றெல்லாம் இடைவிடாது மூச்சும் பேச்சுமாக பேசுகின்ற இன்றைய ஆட்சியாளர்கள், இந்நாட்டுத் தமிழ் மக்களிடம் மாறுபட்டவர்களாகவும் நடந்து வருகின்றார்கள். ஈழத்தமிழகத்திற்கும் தென்னகத்திற்கும் இருந்து வரும் தொன்மையான கலை கலாச்சார, பண்பாட்டு உறவு முறைகளுக்கு உலைவைக்க ஆட்சியினர் முனைந்துள்ளார்கள். தமிழகத்திலிருந்து இங்கு இறக்குமதி செய்யப்படும் இலக்கிய படைப்புகளையும் கலாச்சாரப் பத்திரிகைகளையும் தடை செய்ய வேண்டுமென்று இங்குள்ள செல்லாக்காசு எழுத்தாளர்களும் ஆட்சியாளர்களின் அடிவருடிகளும் அரசினருக்கு பக்கபலமாய் பல்லவிபாடுகின்றார்கள்.

இதற்கு இவர்கள் கூறும் ஒரே காரணம் உள்ளூர் எழுத்தாளர்களை ஊக்குவிக்கவும் அவர்களுக்கு ஆக்கம் தரவும் பத்திரிகைகள் அநேகம் நாட்டில் ஆரம்பிக்கலாமென்றும் கூறுகின்றார்கள். இதுதான் இன்று இவர்கள் கூறும் காரணங்கள்.

### குழிபறிப்பு

தமிழர்களைப் பொறுத்தமட்டில் இந்நாட்டில் எத்தனையோ பிரச்சினைகள் உண்டு. அப்பிரச்சினைகளுக்கெல்லாம் செவிமடுக்காத ஆட்சியாளர்கள் இன்று இந்நாட்டுத் தமிழ் எழுத்தாளர்கள் மேல் மோகம் கொண்டதின் முக்கிய உள்நோக்கமென்ன? உண்மையில் இந்த மோகத்தின் பின்னணியில் மாபெரும் துரோகம் மறைக்கப்பட்டுள்ளது. எம் எதிர்காலச் சந்ததியினருக்கு குழிபறிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்திற்கும் ஈழத் தமிழகத்திற்கும் இருக்கின்ற தொடர்பு வரலாற்றுக்காலத்திற்கும் அப்பாற்பட்டது. எம்முடைய உணர்வும், மொழியும், பண்பாடும் ஒருங்கே பின்னிப் பிணைந்தது. இந்த இறுக்கமான உணர்வு பேரறிஞர் அண்ணாவால் மேலும் பொலிவும் வலிவும் பெற்றுள்ளது. அவருடைய சிந்தனைக் கதிரொளியில் தமிழர்களெல்லாம் உணர்வும் உள்ளொளியும் பெற்றிருக்கின்றார்கள்.

### அண்ணாவின் சகாப்தம்

அறிஞர் அண்ணாவின்பின் தமிழர்களிடத்தில் புதிய சகாப்தம் உருவாகியுள்ளது. இலக்கியத்தில் ஒரு மறுமலர்ச்சி, பத்திரிகைத் துறையில் ஒரு புதுமலர்ச்சி இப்படியாக எல்லாத் துறைகளிலும் எழுச்சி ஏற்பட்டுள்ளதை யாரும் மறுக்க முடியாது. குறிப்பாக இளந்தமிழர் சமுதாயம் இந்த எழுச்சிகளால் விழித்திருக்கின்றது.

விழித்துவிட்ட இந்த இளம் சமுதாயத்தைக் கண்டு இன்று மாற்றார் மனம் கொதிக்கின்றார். இனியும் இது தொடர்ந்தால் எமக்கு இன்னல் ஏற்படுமென்று பீதி கொள்கின்றார்கள். இப்படியான அர்த்தமற்ற எண்ணங்களைக் கொண்டே இனியும் தொடர்ந்து தமிழக ஏடுகளை இறக்குமதி செய்தால் தொல்லை என்பதற்காக சிறுபிள்ளைத்தனமான காரணத்தைக் காட்டி எமது அறிவுக்கும் ஆற்றலுக்கும் தடை போடுகின்றார்கள்,

### தமிழன் மானத்தை தடவிப்பார்க்கிறார்கள்

இந்தத் தடை எல்லா வெளிநாட்டுப் பத்திரிகைகளுக்கும் விதிக்கப்பட்ட தென்றால் நாம் ஓரளவு தெளிவு பெறலாம். ஆனால் ஆங்கிலத் தினசரிகளுக்கும் பசியா போன்ற கொம்யூனிசிய நாட்டுப்பத்திரிகைகளுக்கும் சஞ்சிகைகளுக்கும் இந்நாட்டில் தடையில்லை என்று அரசினர் வெளிப்படையாக தெரிவித்துள்ளனர். இது இந்நாட்டுத் தமிழ் மக்களுடைய உணர்ச்சியையும், மானத்தையும் ஆட்சியாளர்கள் அதிகாரச் செருக்கோடு தடவிப் பார்க்கின்றார்கள். இவர்களுக்குப் பக்கபலமாக தமிழ் அரசியல் வாதிகள் சிலரும் சேர்ந்து கொண்டு எம்மை அழிக்க முற்படுகிறார்கள் என்பதையெண்ணி இன்று வேதனையும் வெட்கமும் படுகின்றோம்.

### எதிர்த்தே தீருவோம்

எவர் எதைச் செய்தாலும் எம்மிடம் கொழுந்து விட்டெரியும் உணர்வை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது. நாம் நம் தாய்நாட்டின் மீது கொண்டுள்ள பற்றையும் பாசத்தையும் தடுக்க முடியாது. இதை எதிர்க்க இன்று நாம் எந்தத் தியாகத்தையும் செய்யத் தயாராக உள்ளோம்.

தமிழ் ஈழத்தில் வளர வேண்டும். நமது நாட்டின் வாசனை தமிழில் மணக்க வேண்டுமென்பது எல்லோர் விருப்பமுமே. ஆனால் அதற்காக நாம் உயரத்தின் உச்சியில் நிற்கின்றோம் என்ற காரணத்திற்காக நாம் உச்சியில் ஏற உதவிய உறுதி மிக்க ஏணியை ஆட்சியாளர் கூறுவதற்காக உதைத்துத் தள்ளிவிட முடியாது. நாம் மேலும் எம்மொழியின் வளர்ச்சிக்காக பேரறிஞர் அண்ணாவின் வழி நின்று உழைக்க வேண்டும்.

கல்முனை
**நீ. கரிமாறன்**

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் (18)

மனிதனைத் தவிர மற்றும் ஜீவராசிகள் பெரும்பாலும் குறுக்கே தான் வளர்ந்திருக்கின்றன. ஆண்டவன மனிதனை மட்டும் மேல் நோக்கி நெடுக வளர்த்திருக்கின்றான். குறுக்குப் பக்கமாக வளர்ந்துள்ள வற்றுக்கு உள்ள தற்காப்புக் கவசங்கள் மனிதனுக்கு இல்லையாயினும், அவனுக்கு அறிவு என்ற ஒன்றைக் கொடுத்திருக்கின்றான். இந்த அறிவைக்கொண்டு மனிதன் சுகத்தை அனுபவிக்கலாமாயினும் அவன் துன்பத்தையே அதிகம் அனுபவிக்க நேரிடுகின்றது. இதற்கெல்லாம் காரணம்? ஆசை! மற்ற ஜீவராசிகளை விட மனிதனுக்கு இருக்கும் அடங்காத ஆசையே துன்பத்துக்கு வித்தாக அமைகின்றது. நம்மைத்தவிர வேறு சிறந்த ஒன்று இருக்கின்றது என்ற நினைப்பே ஆசையை உற்பத்தி செய்கின்றது. அதை விடுத்து, அதுவும்—இதுவும் ஒன்று என்னும் நிலை அடைந்தால்—ஞானம்—ஏற்பட்டால்—ஆசையில்லை, எனவே கோபம் இல்லை, பாபம் இல்லை, பயமில்லை. ஆனால் ஆசை என்று ஒன்று இருப்பதினால் எத்தனைக்குப் பயப்படவேண்டியிருக்கின்றது.

—இவ்வாறாக எண்ணினாள் பானுமதி.

மோகினியிடம் தர்க்க வாதம் ஆரம்பித்த உடனேயே வாசலில் வந்த அன்னபூரணி அம்மாளை அவள் பார்த்துவிட்டாள். என்ன இருந்தாலும் அவளுடைய மூத்த மருமகளைத் தான் கண்டித்துப் பேசுவது சரியல்ல என்ற ஒரு பயம் அவள் இதயத்தில் தோன்றியதும் வாயடைத்துப் போனாள். ஆனால் அன்னபூரணியோ தங்கத்தில் இருக்கும் வேறுபாடுகளைக் கண்டறிவதாயின் பத்தரைமாற்றுத் தங்கத்துடன் கலப்புத தங்கததையும நேரில் வைத்துப பார்த்துத்தானே அறிய வேண்டும், அப்படியான ஒரு சந்தர்ப்பத்தை நேரில் பார்த்துவிட்ட திருப்தியில் எதுவும பேசாமல் நின்றிருந்தாள்.

'அம்மா என்னம்மா பேசாமலிருக்கின்றீர்கள்?' என்றாள் பானு.

'என்னடியம்மா பேசுவது? பேசுவதற்கு இடமில்லாத ஒரு நிலையை நீங்கள் உருவாக்கிவிட்டீர்களே!' என்றாள்.

'அத்தை, இவள் கண்டபடி கதைப்பதற்குத் துணிந்துவிட்டாள். என்னை ஒரு மதிப்பில்லாது பேசுகின்றாள். பிச்சைக்கார நாய்களை வீட்டில் கண்டபடி சுற்ற விட்டால் இப்படித்தானே பேசுவாள்.'' என்றாள் மோகினி.

பானுவின் முகமெல்லாம் குங்குமம் போலச் சிவந்து ஜொலித்தது. அன்னபூரணி அம்மாளின் கால்களில் விழுந்தாள்.

'பானு! எழுந்திரம்மா. அவள் என்னவோ பிதற்றுகின்றாள். நீ அதைக் காதில் போட்டுக் கொள்ளாதே. நீ படித்தவள். உனக்கு நான் புத்தி சொல்ல வேண்டியதில்லை' என்றாள் அன்னபூரணி.

'அத்தை! உங்களை நல்லா வளைத்துப் பிடிக்கத் தெரிந்து வைத்திருக்கின்றாள். இப்படித்தான் ரகுவையும் பிடித்தாள்' என்றாள்.

'மிஸஸ் ராஜாராமன்! உங்களிடம் ஒரேயொரு கேள்வி மட்டும் கேட்கின்றேன். ரகு உதவாக்கரை, அவன் உன்னைக் கெடுத்து விடுவான், நீ ஓடி விடு என்று என்னிடம் கூறினீர்களே? இன்று நான் ரகுவைப் பிடித்து விட்டதாக நீங்கள் ஏன் என்மீது கோபப்பட வேண்டும்?' என்றாள்.

அவள் கேள்விகளுக்கு மோகினியால் பதில் கூற முடியவில்லை. பிரமித்துப் போய் நின்றாள்.

'ஏன் மோகினி! அவள் கேட்கின்றாளே? நீ ஏன் வாயடைத்துப் போய் நிற்கின்றாய்? மறுமொழி கூறேன்.' என்றாள் அன்னபூரணி.

'அண்ணி எப்படியம்மா கூறுவார்கள்? தன் தங்கையை ரகுவின் அறைக்குப் போகும்படி கூறிவிட்டு, அவனே தன் தங்கையை வரவழைத்துக் கொடுக்க முனைந்தான் என்று குற்றம் சாட்டி வீட்டை விட்டே வெளியேறி, என் கல்யாணத்துக்கு ஒரு நாள் மட்டுமே அந்நியர்கள்போல வந்துவிட்டுப்போன இவர்களா பதில் கூறுவார்கள்?' என்றாள் அங்கே வந்த பாரதி.

'என்னடியம்மா புதுக்கதை கூறுகின்றாய்?' என்றாள் மோகினி.

'புதுக்கதை இல்லை அண்ணி, உங்கள் இரகசியத் திட்டங்களைத்தான் கூறுகின்றேன்' என்றாள் பாரதி.

'என்னடி இரகசியம்? நீயும் இவளும் சேர்ந்து சதித்திட்டம் போட்டிருக்கின்றீர்களா?' என்றாள் மோகினி.

'அப்படி ஒரு திட்டம் எங்களுக்குள் உதயமாகாது அண்ணி. அப்பாவி அண்ணனை ஏமாற்றி நீயும், உன் தங்கை கீதாவும் பத்தாயிரம் ரூபா அந்த அயோக்கியன் நாகலிங்கத்துக்குக் கொடுத்தீர்களே ஏன்?'




**யாழ். ஜனார்த்தனன்**

'பாரதி!' என்று மோகினியும் பானுமதியும் ஏக காலத்தில் அவள் பெயரை அழைத்தனர்.

'பானு! நீ பயப்படாதே; இனியும் உண்மைகளை நீ மூடிவைக்கத் தேவையில்லை. எங்கள் குடும்ப கௌரவத்துக்குக்கெட்ட பெயர் வரும் என்று நீ மூடிவைக்க, அண்ணி உன்னைக்கெட்டவளாக்க முனைகின்றாள். என்று ஆதியோடந்தமாக எல்லாவற்றையும் கூறிவிட்டு,'' பானு இன்று பெரியண்ணா வந்ததும் நானே அவரிடம் கேட்டு விடுகின்றேன்.' என்றாள்.

'என்ன கேட்கப் போகின்றீர்கள்? இதோ நானே வந்து விட்டேன்; மோகினி உன்னை எங்கெல்லாம் தேடுவது?' என்றார் அங்கே வந்த ராஜாராமன்.

'பார்த்தீர்களா? தங்கை தங்கை என்று ஓடி வந்தீர்கள். இங்கே உங்கள் தங்கை என்னை சதிகாரி, பழிகாரி, குடிகேடி என்றெல்லாம் தூற்றுகின்றாள்.' என்று அவர் பக்கமாகச் சென்றாள்.

'அப்படியா சொன்னாள்? ஏன் அம்மா நீங்களும் பார்த்துக்கொண்டா நிற்கின்றீர்கள்?' என்று தாயைக் கேட்டார் ராஜாராமன்.

'அடே ராஜா! கேளடா இந்த அநியாயத்தை.' என்று அவள் தொடங்கிய பொழுது, 'அம்மா நான் கதைகேட்க வரவில்லை. மோகினியைப் பாரதி திட்டினாளா? என்றார்.

'நீங்கள் வராவிட்டால் அடித்தே துரத்தினாலும் துரத்தியிருப்பார்கள். உங்களம்மா என் பின்னாலேயே வந்துவிட்டார்கள். தாயும் மகளும் இந்த மானங்கெட்டவளும் சேர்ந்து நடத்திய காரியத்தை நீங்கள் கேட்கவில்லை.' என்றாள் மோகினி.

'மோகினி! நான் எல்லாம் கேட்டுக்கொண்டுதான் நின்றிருந்தேன்,'' என்றார் ராஜாராமன்.

'கேட்டீர்களா? என்று அவள் கேட்டு முடிக்கு முன்பே ராஜாராமன் வெறிகொண்ட மிருகம்போல அவள் மீது பாய்ந்தார். அவளுடைய தலைமயிரைப் பிடித்துக்கொண்டே மாறி மாறிக் கன்னத்திலும் முதுகிலும் அறைந்தார். அதே வேளையில் அங்கே ஓடி வந்த ரகு, 'அண்ணா! இதென்னண்ணா!' என்று அவரை இழுத்தான்.

'டேய் ரகு! இன்றுதான்டா ராஜாராமன் ஓர் ஆண்மகனாக மாறினான். அதை நீ கெடுத்துவிடாதே. விடடா கையை. என்றார்

'அண்ணா! உங்களை மன்றாடிக் கேட்கின்றேன். இனி அடிக்காதீர்கள். ஒரு பெண்ணைக் கை நீட்டி அடிப்பது உங்களுக்குத் தான் பாபம்.'

'பெண்ணை அடித்தால் தானே பாபம். பெண் உருவில் உள்ள இந்தப் பேய்க்குப் பாபம் காட்டக்கூடாது. இவள் என்னையும் உங்களையும் பிரித்தது மட்டுமல்ல, மற்றவர்கள் என்னை ஒரு மடையனாக நினைத்துச் சிரிக்கவும் செய்துவிட்டாள். சண்டாளி! இவளைச் சும்மா விடக்கூடாது. கொலை செய்தாலும் என் ஆத்திரம் தீராது.' என்று கர்ஜித்தார் ராஜாராமன்.

'அடே ராஜா! போதுமடா என்ன இருந்தாலும் அவளும் ஒரு பெண்தான்டா.' என்றாள் அன்னபூரணியம்மாள்.

'அம்மா உங்களையும் என்னையும் பிரித்துவிடச் சற்று முன் தானே சதி நாடகமாடினாள். நீங்களும் சேர்ந்து சதி செய்ததாகக் கூறினாள். இவளுக்காக பவுரி காட்டுகின்றீர்கள்?' என்றார்.

'[illegible] கால் செய்தவர்களுக்கு மன்னித்து விடுவதுதான் முறை. நீங்கள் படித்தவர். பண்புள்ளவர்.' என்றான் ரகு.

'டேய் ரகு! நானு படித்தவன். எம். ஏ. படித்துவிட்டதால் அறிஞனா? கேவலம் என்னுடன் பிறந்த உன்னையே புரிந்துகொள்ள முடியாதவனாய், இந்த நஞ்சு என் அறிவையே மயக்கிவிட்டதே!' என்று மோகினியைச் சுட்டிக் காட்டினார்.

'அண்ணா! நீங்கள் என்னை எப்படி வேண்டுமானாலும் பேசலாம், எப்படியும் நினைக்கலாம். நான் உங்களை வெறுக்கவுமில்லை. பகைக்கவுமில்லை.'

'அது உன் உயர்ந்த குணம். ஆனால் என் மனம் இந்தச் சாக்கடையில் அல்லவா அமிழ்ந்து விட்டிருந்தது. இவளோடு வாழ்ந்தது போதும். இனி எனக்கு என்ன வாழ்வு? நான்...... நான்...... ரகு.' என்று அவனைக் கட்டிப் பிடித்துக்கொண்டு கண்ணீர் விடலானார் ராஜாராமன்.

'அண்ணா! வானத்து மீனையும், நிலவையும் கூடக் கருமுகில்கள் மறைப்பதில்லையல்லவா? அப்படி அவை மறைக்கப்பட்டு விட்டால் தம் ஒளி இழந்து மங்கிவிடுவதில்லையே எல்லாம் கண நேரம் நடக்கும் விதியின் விளையாட்டுத் தான். கவலையை உதறுங்கள்' என்றவன் அழுது கொண்டிருக்கும் மோகினியைப் பார்த்து, 'அண்ணி' என்றான்.

'என்னை மன்னித்து விடுங்கள்.' என்று ராஜாராமனின் காலடியில் விழுந்தாள் மோகினி.

**நமது தொடர்கதை**

'என் காலைப் பிடித்துப் பயனில்லை மோகினி நீ பிடிக்க வேண்டியது இவன் கால்களை.' என்றார் ராஜாராமன்.

'அண்ணா என்னண்ணா நீங்கள்!' என்றான் ரகு.

'மோகினி அவனைப் பெற்றவளிடம் மன்னிப்புக் கேட்டு நீ செய்த பாவத்துக்குப் பரிகாரம் தேடிக்கொள்' என்றார்.

உடனேயே மோகினி மாமியாரின் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டாள். ஆனாலும் அவள் மனதில் குரோத எண்ணம் மறைந்துவிடவில்லை. பெட்டிப் பாம்பு போல அடங்கிக்கிடந்த ராஜாராமன் விழித்துக் கொண்டுவிட்டாரே என்று தான் தயங்கினாள்.

அதே வேளையில் ராஜாராமனுக்கு அந்த வீட்டில் அவர்கள் குடும்பத்தின் உண்மை நிலைகளை ஓரளவுக்குக் கூறிவைத்த பாரதியின் கணவன் மகேசன், எதுவுமே தெரியாத அப்பாவிபோல சாய்வு நாற்காலியில் படுத்துக் கொண்டே ஏதோ ஒரு மர்ம நாவலில் மூழ்கியிருந்தான்.

அங்கே ஒரு பெரும் புயல் அடித்து ஓய்ந்து அமைதி நிலவியிருந்தது. எல்லோரும் சென்றுவிட்டனராயினும் பானு என்ன நடந்து முடிந்தது என்று நினைக்க முடியாத அளவுக்கு அதிர்ச்சியில் மூழ்கியிருந்தாள். பூசை மாடத்திலிருந்த கண்ணன் சிலை அவள் தோற்றத்தைப் பார்த்துச் சிரிப்பது போன்றிருந்தது அவளுக்கு. அந்த மாடத்தில் ஒளி பரப்பி நின்ற குத்துவிளக்கின் திரி எண்ணெயின்றிக் கருகியதால் ஏற்பட்ட நெடி அவள் சுவாசத்தில் கலந்தபோது தான் சுய உணர்வு பெற்றாள்.

அவள் சிந்தனையில் ரகு — ராஜாராமன் ஆகிய இருவ

(10-ம் பக்கம் பார்க்க)

## கணவன் ஆனாலும் கல்! புருஷன் ஆனாலும் புல்!

காலை மணி எட்டு வரை கட்டில் மீது
கணவன் காப்பி கொண்டு தருமட்டும் மாது
பாலை விழிமூடிப் படுப்பாள் தப்பாது!
பாவை இவளுக்குப் பாசங்கள் ஏது?

கணவன் ஆனாலும் கல்!
புருஷன் ஆனாலும் புல்!

வீடு கணவன் பெருக்குதல் சட்டம்!
விளக்குமாற்றுக்கும் இவன் மிக மட்டம்!
போடுவாள் சண்டாளி ஆயிரம் கொட்டம்!
புருஷன் உடல்கெட்டால் இவளுக்கா நட்டம்?

கணவன் ஆனாலும் கல்!
புருஷன் ஆனாலும் புல்!

கண்ணாடிப் பூம்பட்டணிவாளே தேவி!
கணவன் பழம் பீத்தல் கட்டுவான் பாவி!
பெண்ணாள் இவள் கையில்தான் வீட்டுச்சாவி!
பேயன் வேண்டுமானால் கட்டட்டும் காவி!

கணவன் ஆனாலும் கல்!
புருஷன் ஆனாலும் புல்!

கொழுநன் அழகுக்கைக் கடிகாரம் விற்று
குஷியாய்த் திரைப்படம் பார்ப்பாளே சிட்டு!
தொழுவான் இவளைக் கணவன் கும்பிட்டு!
தோகை இவளுக்குப் புருஷன் எம்மட்டு?

கணவன் ஆனாலும் கல்!
புருஷன் ஆனாலும் புல்!

அத்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கிளிநொச்சியில்தான் தமிழரசு மாநில மாநாடு நடைபெறவேண்டும்!

## எங்கள் தொகுதி ஆனந்தசங்கரியின் சீதனமும் அல்ல; முதுசொமும் அல்ல!"

இலங்கைத் தமிழரசுக் கட்சி மாநாடு நடத்த இருப்பது இன்றைய அரசியல் நிலைமையை மக்களுக்கு எடுத்துக் காட்டவும், அதற்கு என்ன பரிகாரம் காணலாம் என்று சிந்திக்கவுமே தவிர, எப்பொழுதோ நடக்க இருக்கிற தேர்தலுக்கு ஆட்சேர்ப்பதற்கல்ல. கட்சி ஆரம்ப காலந்தொட்டு மாநாடுகள் மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுத்தான் செயலாற்றியதே தவிர, கிளிநொச்சி நடாளுமன்ற உறுப்பினரைப் போலவோ அல்லது அவர் சார்ந்திருக்கும் தமிழ்க் காங்கிரசைப் போலவோ தேர்தல் காலங்களில் மாத்திரம் மாநாடு என்று கூறி தேர்தல் திருவிழா நடாத்தும் கட்சியல்ல தமிழரசுக் கட்சி என்பதை. நவீன எட்டப்பனாக மாறியிருக்கும் கிளிநொச்சி நாடாளுமன்ற உறுப்பினர் திருவாளர்; வி. ஆனந்தசங்கரி அவர்களுக்குத் தெரியாவிட்டாலும், வடக்கு, கிழக்கு, மலையகமெங்கும் வாழ்கின்ற தமிழ் பற்றுள்ளவர்கள் அனைவருக்கும் தெரியும்.

### வீரம் நிறைந்தவர் நாம்

வீரத்திற்கும் தமிழ் உணர்ச்சிக்கும் பேர் போனவர்கள் கிளிநொச்சி தொகுதி மக்கள். காலமெலாம் தமிழ், தமிழுக்கே எங்கள் உயிர் என்று வாழ்ந்தவர்கள்—வாழ்ந்து காட்டியவர்கள். கண்ணீருக்கும் பலமுறை தோற்றவர் ஒருமுறையாவது பாராளுமன்றப் படியை எட்டிப்பார்க்கட்டும் என்று ஆனந்தசங்கரியை பாராளுமன்ற உறுப்பினர் ஆக்கினர்களே தவிர, மனப்பூர்வமாக தமிழ்ப் பற்றுடன் அதைச் செய்யவில்லை என்பதை இன்று கிளிநொச்சியில் அவருக்காக உழைத்தவர்கள் கூறுகிறார்கள். அது மட்டுமல்ல பாராளுமன்றத் தேர்தல் முடிந்து ஒரு ஆறுமாதங்களுக்குள் நடைபெற்ற கிளிநொச்சிப் பட்டண சபைத் தேர்தலிலும், கரைச்சிக் கிராம சபைத் தேர்தலிலும் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டு, முகத்தில் கரிபூசப்பட்டபின்னரும், தான் எப்படி கிளிநொச்சித் தொகுதியில் வென்றேன் என்பதை மறந்து, தொகுதி தனது சீதனம் என்ற தொனிப்பால் அறிக்கை விட்டிருப்பதைக் கண்டு கிளிநொச்சித் தொகுதி மக்கள் கட்டப்பொம்மனைத் தெரிவுசெய்ய வேண்டியவர்கள் எட்டப்பனைத் தெரிவுசெய்தமைக்கு இரத்தக் கண்ணீர் வடிக்கிறார்கள். தமிழ்பேசும் மக்கள் இவரது அறிக்கையைக் கண்டு மனம் புழுங்குகிறார்கள்.

### வாய்ப்பூட்டு

இலங்கை குடியரசாகப் பிரகடனப்படுத்த இருக்கிறது. குடியரசில் இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டிருக்கிறதா? அல்லது நிரந்தர அடிமைகள் ஆக்கப்பட்டிருக்கிறார்களா? என்பதை தமிழ் மக்கள் அறியவில்லை. காரணத்தை நன்றாகச் சிந்திக்க வேண்டும். அவசரகால நிலைமையை அமுலில் வைத்துக்கொண்டே அரசாங்கம் குடியரசாகும் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறது. அதன் பலாபலன்களை எடுத்துக்கூற முடியாத நிலையில் மக்களுக்கு வாய்ப்பூட்டு இட்டிருக்கிறது. ஜனநாயகத்தின் தத்துவமே முற்றாக நிராகரிக்கப்பட்டிருக்கிறது.

### இக்கட்டான நிலை

அரசாங்கத்திற்குத் துதிபாடும் பத்திரிகைகளும், அரசாங்கத்தின் வால்வருடும் பாராளுமன்ற உறுப்பினர் தன்னும் இதுவரை தமிழர்களின் உரிமையைப் பற்றி ஏதேனும் கூறினார்களா? யாழ்ப்பாண மேயர் துரையப்பாவுக்கு பிறந்த நாள் என்று கூறி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரசாரத்தை நடாத்தும் அரசாங்கம், குமார சூரியருக்கும், மந்திரிமாருக்கும் வரவேற்பளித்து அரசியல் பேச அதிகாரம் வழங்கும் இன்றைய சோசலிச அரசாங்கம் இலங்கை குடியரசாகப் போகும் நேரத்தில் அதனால் தமிழ்மக்கள் பாதிக்கப்படுவதை எடுத்துக்கூற சாதாரண பொதுக்கூட்டம் தன்னும் நடத்த முடியாத நிலையில் தமிழ் மக்கள் இருப்பதை கிளிநொச்சி நாடாளுமன்ற உறுப்பினர் என்று மார்தட்டி கூறும் தமிழ் பிரதிநிதி திரு. வீ. ஆனந்தசங்கரி அவர்கள் அறிவாரா?

சாதாரணமாக தமிழினத்துக்காக கடந்த 25 ஆண்டுகளாக உழைத்த அமரர் நாகநாதனின் கூட்டத்துக்கே அனுமதி கட்டுப்பாட்டுடன் வழங்குகின்ற அரசாங்கம் தமிழ் மக்களை எவ்வளவுதூரம் புறக்கணிக்கின்றது என்பதை உணரவேண்டும்.

## கிளிநொச்சி பா. உ.க்கு பட்டினசபை தலைவர் ச. சு. முருகேசு சூடான பதில்!


தமிழருக்காகப் போராடுகின்ற கட்சி என்றமுறையில் தமிழினத்துக்கு ஏற்படும் ஆபத்தை நிச்சயம் விளக்கியே தீரவேண்டும். உங்கள் கட்சியின் பிரசாரத்தை மந்திரிமார் என்ற தோரணையில் நடத்துகின்றீர்கள், எங்கள் பிரச்சினையையும் எங்கள் மக்களுக்கும் விளங்கப்படுத்த சந்தர்ப்பந் தாருங்கள் என்று தானே சட்டத்தைமீறி கூட்டம் நடாத்துவதாக தமிழரசுக்கட்சி கூறுகின்றது:

அதைக்கூட அரசாங்கமோ, சிங்களப் பிரதிநிதிகளோ மறுத்துக்கூறுமுன்பு தமிழன் என்று கூறிக்கொள்ளும் மறு அறிக்கைவிட்டு குட்டையைக் குழப்பிவிடும் காரணம்என்ன? சாமி வரங் கொடுத்தாலும் பூசாரி வரம்கொடாத நிலையில் இவர் ஏன் அரசாங்கத்திற்கு முண்டு கொடுக்கிறார் என்று தெரியவில்லை.

தமிழரசுக்கட்சி கிளிநொச்சியில் மாநாடு நடத்தினால் அவருக்குள்ள செல்வாக்கு அரசாங்கத்துக்கு தெரிந்துவிடும் என்ற அச்சமா? அல்லது அடுத்த நேரத்தில் அவருடைய ''அவுட்'' வெடிக்க மாட்டாது என்பது இப்பொழுது காணச் சகிக்கமுடியாமல் தத்தளிக்கிறாரா? இவர் ஏன் சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுக்கிறாரோ தெரியவில்லை:

தமிழரசுக்கட்சி தமிழரின் உரிமைக்காக என்னென்ன வழிவகைகளைக் கைப்பற்ற வேண்டுமோ அவற்றைக் காலத்துக்குக் காலம் கையாண்டதே தவிர யு: என். பிக்கோ அன்றி இடதுசாரிக் கட்சிக்கோ முண்டுகொடுத்தது கிடையாது. தமிழரின் உரிமையை எப்படியாவது பெறவேண்டுமென்பதற்காகத்தான் பண்டாரநாயகா அரசாங்கத்துடன் சேர்ந்து ஒப்பந்தம் செய்தது, ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்ட பின்னர்தான் அரசாங்கத்திற்கு மாறாக சட்டமறுப்பு சத்தியாக்கிரகங்களை தமிழரசுக்கட்சி நடாத்தியது:

தமிழினத்தை அழிக்க எப்பொழுதும் தமிழரசுக்கட்சி முயற்சித்தது கிடையாது என்பதை இவர் உணராவிட்டாலும் கிளிநொச்சித் தொகுதி மக்கள் நன்குணர்வார்கள்; கிளிநொச்சித்



தொகுதிபிரிக்கப்பட்டகாலம் தொட்டு, தமிழரசுக்கட்சியின் இலட்சியத்தை மேற்கொண்டு தமிழரசுப் பாராளுமன்ற உறுப்பினர்களையே தெரிவு செய்தது. சென்ற தேர்தலில் இவர்விட்ட கண்ணீர் இவர் பத்து வருடங்களாக ஏற்படுத்திய நாட்டுப் பிரிவினை, சிலரை ஏமானிகளாக்கி இவரது வெற்றியை சொற்ப வாக்குகளாற் தேடித்தந்ததை இவர் இன்று மறந்து வாழ்ந்தாலும் அவர்கள் உணர்ந்து விட்டார்கள்;

தமிழரசுக்கட்சி இரத்தக் களரியை ஏற்படுத்தாது தமிழரை மானமுள்ளவர்களாகத்தான் வாழச்செய்ய தமிழினம் அடுத்து என்ன செய்யவேண்டும் என்பதைத் தீர்மானிக்கத்தான் மாநாடுகூட முயற்சிக்கிறார்கள் என்பதை அவர்கள் நன்குஅறிவார்கள். வீண் பூச்சாண்டி அறிக்கைகளை விட்டு கிளிநொச்சித் தொகுதி மக்களின் வீரதிறகும் தமிழ் பற்றுக்கும் மாசு கற்பிக்க இவர் முயலுகிறார்.

---

## தீக்குள் விரலை ...

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

ரது அன்பு பிணைப்புத்தான் முதலிடம் பெற்றிருந்தது. தாலிகட்டிய மனைவியின் துர்ப்போதனையால் உடன் பிறந்தவன் மீது வெறுப்பு ஏற்பட்டிருந்தாலும், அந்த வெறுப்புணர்ச்சியின் கீழ் நின்ற பாசப் பிணைப்புத்தான் அவனைச் சிந்திக்க வைத்தது. ஆனால் ரகு அவரை வெறுக்கவோ, பகைக்கவோ இல்லை என்று கூறிய பொழுது அவர் இதயமே கசக்கிப் பிழிந்தது போன்ற வேதனையுடன் விட்ட கண்ணீர் அவர்களிடையேயுள்ள ரத்த பாசத்தின் முனை அறுந்துவிடவில்லை என்பதையே நிரூபிப்பதாக இருந்தது.

ஆனால் ரகுராமன்? அவன் ஒரு அபூர்வ பிறப்புத்தான். தன்னை வெறுத்தவர்களிடமே அன்பு காட்டும் பண்பும் ... இந்த நிலை... என்று எண்ணியவளாய் பூசைமாடத்திலிருந்த கண்ணனின் சிலையைப் பார்த்தாள். அந்தச் சிலையின் முகத்தில் தோன்றும் சிரிப்பு, அதில் தவழும் அருள், அந்தச் சிறு விழிகளில் மிளிரும் குறும்பு அத்தனையும் அந்த ரகுராமனிடம் நிறைந்திருக்கின்றதே! அன்று கல்லூரியில் மாணவிகளுக்கு பாரதி பாடலில் போதித்த பாடல் வரிகள் அவள் மனதில் சுழன்று காதிலே ஒலித்தன.

'சின்னக் குழந்தைகள்
போல விளையாடிச்
சிரித்துக் களித்திடுவான்
— நல்ல
வண்ண மகளிர்
வசப்படவே....
கோபத்திலே ஒரு
சொல்லில் சிரித்து
குலுங்கிடச்
செய்திடுவான்...
பெரும் ஆபத்திலே வந்து
பக்கத்திலே நின்று
அதனை விலக்கிடுவான்—

என்று அவன் நினைவில் சுழன்ற கவிதையின் அடிகளில் ரகுராமனே நின்று சுழன்று கொண்டிருந்தான். அந்த நினைவில் அவள் மனதில் வேறு ஒரு இன்பமான செய்தியும் சேர்ந்து சுழல ஆரம்பித்தது. அந்தச் செய்தியால் நடந்தவைகளையே மறந்து, பித்துப் பிடித்தவள் போல ஓடிச் சென்று கட்டிலில் விழுந்தாள்.

(வளரும்)

---

## தி.மு.கழகம்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

கும்? — என்று யாராவது கேட்பார்களானால் 'உனக்கும் இல்லை; உன் கழகத்துக்கும் இல்லை! போ!' — என்று மக்கள் சமுதாயம் கைவிரித்துவிடும்!

'கழகத்திற்குக் கிடைக்கும்எல்லாப் பெருமையும் எனக்கே! எனது உழைப்பால் கழகத்திற்குப் பெருமை சேர்ப்பேன்! அந்தக் கழகத்திற்காக உயிரை மூச்சை பணயமாக வைத்துப் பாடுபடுவேன் — என்று கூறும் உண்மையான தொண்டனால் தி. மு. கழகம் வளர்கிறது!

அத்தகைய உண்மையான தொண்டனை தி. மு. கழகம் கைவிட்டது இல்லை; கைவிடப் போவதுமில்லை!

ஏனெனில் நாங்கள் தொண்டர்களின் உள்ளங்களைப்புரிந்தவர்கள்! தொண்டர்களை மதிப்பவர்கள்!

காரணம் நாங்களே தொண்டர்களாக இருந்து வளர்ந்து வந்தவர்கள்! பிறக்கும் போதே தலைவர்களாகப் பிறந்தவர்களல்லர் நாங்கள்!

முதலமைச்சர் என்ற பொறுப்பும் பெருமையும் இன்றைக்கு எனக்கு இருக்கலாம்!

ஆனால், துவக்க காலத்தில் தலைவர்களுக்கு மேடை போட்டுக் கொடுத்து ஒலிபெருக்கி அமைத்துக் கொடுத்த தொண்டன் நான்!

சுவரொட்டிகளை எடுத்துக் கொண்டு வீதிவீதியாகச் சென்று — பசை தடவி — சுவரில் ஒட்டியதால்... தழும்பேறிய கரம்—எனது கரம்!

நான் அமைத்த மேடையில் தலைவர்கள் பேசியது கேட்டு பூரித்துப்போய் —கையொலியெழுப்பி எழுப்பிக் காய்த்துப்போன கரம் தான் எனது கரம்!

எடுத்த எடுப்பிலேயே பேச்சாளராகி — தலைவராகி விடவில்லை நான்! சாதாரணமான—கீழ் நிலையிலுள்ள தொண்டராக இருந்து வளர்ந்து வந்தவன்! என்னைப் போலவே நமது பொதுச் செயலாளரும் மற்ற கழக முன்னணியினரும் அத்தகைய நிலையிலிருந்து உயர்ந்து வந்தவர்கள் தான்! அதனால் எங்களுக்குத் தொண்டர்களின் உள்ளம் புரிகிறது.

கூட்டத்திற்கு ஒருவரை அழைத்து அவர் வரவில்லை என்றால் தொண்டரின் மனம் என்ன பாடு படும் என்பதை நானே பலமுறை உணர்ந்திருக்கிறேன்.

திருவாரூரில் தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றம் அமைத்து அதன் ஆண்டு விழாவை நடத்தத் தீர்மானித்தோம்.

அதற்கு ஐந்து தலைவர்களை அழைத்திருந்தோம். அவர்கள் வருவார்கள் என்று திருவாரூர் ரயிலடிக்கு அதிகாலையிலேயே சென்று எனது நண்பர்களுடன் காத்திருந்தேன்!

ரயில் வந்தது: தலைவர்கள் வரவில்லை. எனக்கு உலகமே சுற்றுவது போல் தெரிந்தது. ரயிலடியிலேயே மயக்கமடைந்து வீழ்ந்தேன். கண்விழித்துப்பார்த்த போது மருத்துவமனையில் இருந்தேன்.

பின்னர், கும்பகோணத்திற்கு வேறு ஒரு கூட்டத்திற்கு வந்திருந்த நாவலர் அவர்களையும், பேராசிரியர் அவர்களையும், மதி அவர்களையும் அழைத்து வந்து கூட்டத்தை நடத்தினேன்.

ஆகவே ஒரு கூட்டம் நடத்துவது என்றால் எத்தனை பேரிடம் கை நீட்ட வேண்டும் — உண்டியல் குலுக்க வேண்டும் என்பது எல்லாம் நான் அறிவேன். பொதுச் செயலாளரும், கழக முன்னணியினருமே அறிவார்கள்!

அத்தகைய • தொண்டர்களை கழகம் மறக்காது தக்க நேரத்தில் மதிப்புத்தரும்.

---

## தென்னக பத்...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

வந்து குவிகின்றன: அவற்றை எதிர்த்துக் குரல் கொடுப்போர் எவரையும் காணவில்லை.

ஈழத்து நாளாந்த செய்தி இதழ்களான தினகரன், தினபதி, மித்திரன் Sun Pictorial Weekly ஆகியவற்றில் வெளிவரும் படங்கள், கட்டுரைகள் கதைகள் எவர் உள்ளத்தையும் உறுத்துவதாகத் தோன்றவில்லை. தந்தை மகளோடு கொண்ட தகாத உறவு போன்ற கீழ்த்தரப்பால் உணர்ச்சியைத் தூண்டும் செய்திகளுக்கு தலைப்புச்செய்திகள் கொடுக்கும் ஈழத்துச் செய்தி இதழ்களா ஒழுக்கம், பண்பாடு பற்றி முதலைக்கண்ணீர் வடிக்கின்றன. எம்மை ஏமாற்றும் உரிமை எவருக்கும் உண்டு. ஆனால் என் செய்வது யாம் ஏமாற ஆயத்தம் இல்லையே!

தமிழக ஏடுகளுக்குத் தடை விதித்து — எமக்கு அறிவுப் பட்டினியை ஏற்படுத்த—எம் அறிவிற்குத் தடை செய்ய யார் முயன்றாலும் யாம் முழுமூச்சுடன் எதிர்த்தே தீருவோம்—மன்னிக்கவும், எதிர்த்து வெற்றியை நிலைநாட்டியே தீருவோம். எம்முடன் மோதியவர்கள் வென்றதில்லை; வரலாறு தரும் பாடம் இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவில் நிற்பவை

## 7. 'மூத்தண்ணன்' நாகநாதன்

டொக்டர் நாகநாதனிடம் அன்பாலல்ல, அச்சத்தால் குழைந்தவர் திரு. பொன்னம்பலம் என்பதை விளக்க கடந்தவார இதழில் நிகழ்ச்சியொன்றைக் கூற வந்தேன். நாடாளுமன்றச் சபையில் திரு. பொ. அண்ணன் அமிர்தலிங்கத்தை ஈனத்தனமாகச் சாடிய நிகழ்ச்சியை முன்பு குறிப்பிட்டிருந்தேன். அன்று திரு. பொ. பேசுமுன்னர் அண்ணன் பேசினர். பேச்சில், தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் போக்கைக் காரசாரமாகக் கண்டித்திருந்தார். திரு. பொ. குறுக்கிட்டுப் பேசி வகைகயாக வாங்கியும் கட்டிக் கொண்டார். நாடாளுமன்றச் சபையில் பேசப்பட்ட குறுக்குப் பேச்சுக்கள் பின்வருமாறு: (என் நினைவிலேயிருந்து கொய்யப்பட்டவை இவை; வார்த்தைகளிற் தவறிருக்காதென நம்புகிறேன்)

அமிர்: யாழ்ப்பாணப் பிரதிநிதி (திரு. பொ.) காங்கேசன்துறைப் பிரதிநிதியவர்களை (தந்தை செல்வா) அரசியற் சூனியத்திற்கு (Political oblivion) அனுப்புவேன் என்ருர்; நல்லூர்ப் பிரதிநிதியை (டொக்டர்) அவரது புறநகர் மருந்தகத்திற்கு (suburban dispensary) அனுப்பித் தருவேன் என்றும் கூறினர்.

(உண்மையாகவே டொக்டரின் டிஸ்பென்சரி கொழும்பு மாநகர எல்லைக்குட்பட்ட பம்பலப்பிட்டியில், அரச வீதியோ ஆவணவீதியோ எனத்தக்க தலையாய வீதியாகிய காலி வீதியில், கணிப்பான பெரிய சந்தியையொட்டி கம்பீரமாக இருந்தது. திரு. பொ. வின் குறுமனம் அந்த மகிமையைக்கூட டொக்டருக்குச் சூட்டவிரும்பவில்லை. அதனால் 'புறநகர்' என்ருர்.)

திரு. பொ: அவர்களை நான் அனுப்பினேனே.


அமிர்: அவர்களும் உம்மை அனுப்பினுர்களே.

திரு. பொ: எப்போ?

அமிர்; ஏன், 1960 முதல் 1965 வரை நீர் இங்கு இல்லையே.

### என்ன பொருத்தம்!

உட்கிவாயடைத்துப் போனுர் திரு. பொன்னம்பலம். முதல் நாள் தொடங்கிய தமது பேச்சை மறுநாள் தான் அண்ணன் முடித்திருந்தார். அன்னுரின் முதல் நாள் பேச்சை மதிப்பீடு செய்த 'ஒப்சேவர்' நாளேட்டின் சபை நிருபர் மனிக் டீ சில்வா (Manik de Silva) என்பார் அண்ணனின் பேச்சிலே பறந்த தீப்பொறிகளையும் பரவி நின்ற நேர்த்தியையும் குறிப்பிட்டதுடன் திரு. பொ. வுடன் ஏற்பட்ட மோதல்களையும் குறித்து, இருவரும் (திரு. பொ. வும் அண்ணனும்) பொருத்தமான சோடிதான் எனவும் முடித்திருந்தார். திரு. பொ. சில வேளை அண்ணனைக்கூட மன்னித்திருப்பார் போலிருக்கிறது; ஆனுல் 'அற்பனுடன்' 'இந்தப்பெரிய' தயனையும் ஒரேபடியில் வைத்தெழுதிய சபை நிருபரை மன்னிக்கவே மாட்டார்;



### தர்மசங்கடம்

அண்ணன் அமிர்தலிங்கத்தின் நாவினுல் சுடப்பட்ட கொப்புளங்கள் சபை நிருபரின் எழுத்தினுல் ஏற்பட்ட வெப்புநோய் — ஆதியாம் பின்னணியில் பேசமுனைந்த திரு. பொ. மிகவும் வஞ்சத்துடன்தான் எழுந்தார். அண்ணனை அடிக்கத் தயாரானுர்: 'அற்பனை' அடித்து நொருக்க வேண்டும் என்ற அன்னுரின் அங்கலாய்ப்புக்குக் குறுக்கே ஒரு தடை டொக்டர் சபையிலே இருந்தார். நாகநாதன் சபையில் இருக்கிறனே; எதிர்த்துக் குழப்புவானே; நான் முன்பு கூறிய 'டிஸ்பென்சரி' விடயம் வேறு அவனைக் குத்தியிருக்கும்; ஆத்திரத்தோடிருப்பானே என்ன செய்யலாம்? என்று ஒரு கணம் யோசித்தார் போலும். எடுத்த எடுப்பிலேயே டொக்டரைத் 'தாஜா' பண்ணத் துணிந்தார். ஒரு கட்டி 'ஐஸ்' ஸைசத் தாராளமாக டொக்டரின் தலையில் வைத்து பின்வருமாறு பேசத்தொடங்கினுர் திரு. பொன்னம்பலம்: டொக்டரே கொஞ்சம் அசந்துவிட்டார்.

'நானும்—அவரது பெயரைக் குறிப்பிடலாமென்றுல்—நாகநாதனும் நண்பர்கள். ஓர் அறைகூவலுக்கு மறுமொழியாகவே அவரை அவரது டிஸ்பென்சரிக்கு அனுப்புவேன் என்று கூறினேன்.

**கரிகாலன்**

அதுபற்றி நான் மகிழ்ச்சியடையவில்லை, உண்மையில் நாம் ஒருவரையொருவர் எதிர்த்துப் போட்டியிட்டோம். ஆனுல், கண்ணியமாகப் போட்டியிட்டோம். (but we fought clean)''

என பெரியதொரு போடு போட்டுவிட்டு திரு. பொ. தம் பேச்சைத் தொடங்கினுரே பார்க்கலாம். டொக்டரின் பாடு மிகவும் தர்மசங்கடமாகிவிட்டது. நாடாளுமன்றத்தில் பேசும்போது இன்னேர் உறுப்பினரை அத்தொகுதியின் பெயர் குறித்து 'மாண்புமிகு உறுப்பினர்' என அழைப்பதுதான் வழக்கம். டொக்டர் தமக்கு அவ்வளவு தூரம் நெருங்கிய நண்பராம். தாம் பெயர் குறித்து அழைக்கின்ருராம். தம வாயைக் கட்டிவிட்டார் திரு. பொ. என்பதை டொக்டர் உணர்ந்தார்: இவ்வளவு தூரம் நாடியைத் தடவிய பின்னரும் [illegible] யும் எதிர்த்துப் பேசமுடியவில்லை; அது அழகாகவுமிருக்கவில்லை. திரு பொ. வின் புத்திசாலித்தனத்தை எண்ணி முறுவலித்தவாறே வெளியே சென்ருர் டொக்டர்.

### பெருந்தன்மை

கருத்துவேற்றுமை கொண்டவர்களிடத்தும் பெருந்தன்மையுடன் நடக்கும் பேராண்மை டொக்டரிடம் இயல்பாகவே இருந்தது. மாற்றுக் கட்சியினர் சற்று ஏறுமாருக நடக்கும் வேளைகளிற்ருன் டொக்டர் அவர்களுக்குப் புரியக்கூடிய மொழியில் பேசத் தலைப்பட்டிருக்கிருர். திரு. பொன்னம்பலம் விடயத்தில் கையாளப்பட்டது பெருக்பாலும் பின்னைய உத்தியே. டொக்டரும் (முன்னுள்) செனெற்றர் நடேசனும் நண்பர்கள் எனக் குறிப்பிட்டிருந்தேன். பெரிய இடத்து நட்புறவுகளில் வேரும் விழுதும் குறைவு. அந்நட்புறவில் நாவுக்கு இருக்கும் ஈடுபாடு இதயத்திற்கு இருப்பதில்லை. இதற்கு மாருக திரு. நடேசன் டொக்டரின்பால் மிகுந்த ஈடுபாடுகாட்டினுர். டொக்டரின் இல்லம் சென்று அடிக்கடி நலம் விசாரித்துக்கொண்டார். திரு. நடேசன் டொக்டரிடம் வரும்போதெல்லாம் அரசியலைத் தொட்டுப் பேசாது விடமாட்டார். அவ்வேளைகளில் டொக்டரிடம் தமிழரசுக்கட்சியைக் காரசாரமாகக் கண்டித்துக்கொள்வார். டொக்டரும் எதுவும் பேசாது முறுவலிப்புடன் இக்கண்டனங்களையெல்லாம் கேட்டுக்கொண்டேயிருப்பார்.

இரண்டு தடவைகளில் திரு நடேசனின் தனி ஆர்வத்தனத்தையும் டொக்டரின் சலனமற்ற முறுவலிப்போடு கூடிய மௌனத்தையும் கேட்டும் கண்டும், மூச்சுவிடு முன்னே முன்னூறும் நானூறும் பேசும் எங்கள் டொக்டரா இப்படித் தாக்குதலைத் தாங்கிக்கொண்டிருக்கிருர் என வியந்திருக்கிறேன். ஒரு முறை டொக்டரைக் கேட்டே விட்டேன். 'என் வீட்டுக்கு வந்த நடேசன் என் விருந்தாளி. அவரோடு வாதிட்டு ஒரு வெற்றிப் புள்ளி பெறுவதல்ல முக்கியம், என் விருந்தாளி என் வீட்டைவிட்டுச் செல்லும்போது தன் மனம் புண்படாது செல்வதே முக்கியம்' என்ருரே பார்க்கலாம், என் முகத்தில் அசடு வழிந்தது.

ஃ ஃ ஃ

### மூத்தண்ணன்

சின்னுட்களுக்கு முன் அண்ணன் துரைரத்தினத்துடன் 'சிராவஸ்தியில்' பேசிக்கொண்டிருந்தேன். பேச்சு டொக்டரையிட்டுத் திரும்பியது. அண்ணன் துரைரத்தினம் உடனடியாக உணர்ச்சிவசப்பட்டு கண்கலங்கி விட்டார்; எனக்கும் அழுகை வந்துவிட்டது. நான் கண்கலங்கியது வியப்பல்ல; ஏனுகில் கட்சி வட்டாரங்களில் நான் உணர்ச்சி வசப்பட்டவன் என உரைக்கப்படுபவன். சின்னண்ணை [illegible] திரனால் நாம்ஞர் உணர்ச்சி வசப்பட்ட கழுதை' (sentimental Ass) ஆனுல் அண்ணன் துரைரத்தினத்தின் பக்குவமோ வேறு: ஆசாபாசங்களுக்கு அப்பால் நிற்கும் பரிபக்குவமடைந்த மனிதர் என நான் கணித்திருப்பவர் அவர். அவரே கண்கலங்கியபோதுதான் டொக்டருக்கும் அவருக்குமுள்ள உறவு எவ்வளவு உயிரோட்டமானது என்பதைச் சற்றே நிதானமாக நினைத்துப்பார்த்தேன்.

தந்தை செல்வாவும் தலைவர் வன்னியரும் இக்குடும்பத்தின் தந்தையும் தாயுமாக, குட்டித் தம்பியரையெல்லாம் தட்டிக்கொடுத்து வழிநடாத்திய அண்ணன் டொக்டரல்லவா? டொக்டர் அண்ணன் துரைரத்தினத்தை 'டேய்' தம்பி என அழைத்ததாக முன்பு எழுதியிருந்தேன். இவர்களை இங்ஙனம் அழைத்த உரிமையின் பின்னே, டொக்டரால் இவர்களை அணைக்கவும் முடியும், அடிக்கவும் முடியும். உண்மையாகவே அணைத்துமிருக்கிருர். அடித்துமிருக்கிருர். அண்ணன் அமிர்தலிங்கம் டொக்டர் ஒருவருக்குத் தானே மடக்கம்! ஆதாரம் வேண்டுமா? அடுத்தவாரம் எழுதுவேன்.

(வளரும்)

---

## தமிழ் மாண...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள். சுன்னுகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிப் பரிசளிப்பு விழாவில் அவர் மேலும் கூறியதாவது:—

''தமிழ் பேசும் மாணவ உலகிலே ஏமாற்றமும்விரக்தி மனப்பான்மையும் வெறுப்பும் குடிகொள்ளத் தொடங்கி விட்டன. இதனுல் விபரீதமான விளைவுகள் ஏற்படலாம்; தமிழ் பேசும் பட்டதாரிகளின் வேலையில்லாப் பிரச்சினையிலும் பார்க்க இப்பிரச்சினை மிகவும் மோசமானது.

இந்நிலையில் யாழ்ப்பாணத்திலுள்ள கல்விமான்களும் பெற்ருேர்களும், தமிழ் தலைவர்களும் இதுபற்றிச் சிந்தித்து ஆவன செய்ய வேண்டும்'' என்று கூறினுர் பேராசிரியர் வித்தியானந்தன்.

——

## ஈழத்தமிழின...

(1-ம் பகிகத் தொடர்ச்சி)

தமிழுக்கும் இருந்து வரும் ஒருமைப்பாடு சிதைந்து, நமது தமிழ் வேறு; அவர்களது தமிழ் வேறு என்ற நிலைமை தோன்றிவிடும். இது வெறும் கற்பனையல்ல!

800 ஆண்டுகளுக்கு முன் சேரநாட்டில் பேசப்பட்டு வந்த செந்தமிழ் எப்படி வடமொழியுடன் கலந்து மலையாளமாக உருவெடுத்துத் தமிழிலிருந்து வேறுபட்டுத் தனி மொழியானதோ அதே போல இங்கும் தமிழ் சிங்களத்துடன் கலந்து சிதைந்துவிடும். இந்நிலைமை தோன்ற நாம் இறுதிவரை அனுமதிக்க மாட்டோம். தமிழ நாட்டுக்கும் எமக்குமிடையே இருந்துவரும் கலாசார மொழிஉறவுகளை என்னவிலை கொடுத்தும் காத்தே தீருவோம்.''

## தடை...

1ம் பக்கத் தொடர்ச்சி

வரலாற்றை தமிழ்கூறும் நல்லுலகுமுழுவதும் அறிந்து கொள்ளும் பொருட்டு உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் தமக்கேயுரிய அழகுத்தமிழ் நடையில் தினகரன் வாரமஞ்சரியில் கடந்த நான்கு வாரங்களாக எழுதிவந்தார்.

பெரியவரின் வாழ்க்கை வரலாறு தினகரன் வாரமஞ்சரியில் வெளிவருவதை அமைச்சர் குமாரசூரியர் அறவே விரும்பவில்லையாம். தினகரன் வாரமஞ்சரி முற்று முழுவதாக தம்மைப்பற்றியும் தம்மைச்சார்ந்தவர்களைப்பற்றியுமே விளம்பரம் செய்ய வேண்டுமென்பது அமைச்சரின் உள்ளத்து ஆசையாம்.

தந்தை செல்வாவின் வாழ்க்கை வரலாறு தினகரன் வாரமஞ்சரியில் வெளியிடப்படும் விஷயம் அமைச்சரவை மட்டத்திலேயே விவாதிக்கப்பட்டதாகவும் அறியப்படுகிறது;

இதன் எதிரொலியாக 17-10-71 தினகரன் வாரமஞ்சரியின் கொழும்பு பதிப்பில் கட்டுரை நீக்கப்பட்டு வெளியூர்பதிப்புகளில் மட்டும் கடைசித்தடவையாக சேர்க்கப்பட்டதாம்;

தமிழினத்தின் தலைவனின் கட்டுரைக்கு இடம்தர மறுத்த தினகரன், தமிழர் தலைநகரான யாழ்ப்பாணத்தில் 'கலை விழா' நடத்தியிருக்கிறதென்ருல், தமிழினம் வெட்கித்தலைகுனிய வேண்டும்!

——

## மற்ருேர் சதி...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

போது தமிழ் மாணவர்களின் உயர் கல்விக்கு உலைவைக்க மற்ருேர் திட்டத்தை கல்வியமைச்சு தீட்டியுள்ளது.

மாவட்ட விகிதாசார அடிப்படையில்தான் 1972ம் ஆண்டிலிருந்து பல்கலைக் கழகத்துக்கு மாணவர்களை அரசு தெரிவு செய்யப் போகிறதாம்.

மாவட்ட அடிப்படையில தெரிவு நடந்தால் ஆக ஐந்து மாவட்டங்களிலிருந்தே தமிழ் மாணவர்களுக்கு வாய்ப்பு கிடைக்கும்; 17 மாவட்டங்களிலிருந்து ஏனைய இன மாணவர்கள் தெரிவு செய்யப்படுவர்!

——

## சிங்களத்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இப்போது ஐக்கிய முன்னணி அரசு சிங்களத்திணிப்பில் மீண்டும் ஈடுபடமுயற்சிக்கிறது; யாழ்ப்பாணத்திலுள்ள ஒஸ் மானியாக் கல்லூரிக்கு கல்வியமைச்சு எதிர் வரும் சனவரியிலிருந்து சிங்கள ஆசிரியர்களை அனுப்புவது என்று முடிவு செய்துள்ளது. அப்பாடசாலையில் முதலாம் வகுப்பிலிருந்து சிங்களம் போதிக்கப்படவுள்ளதாம். இத் தகவலை வடமாநில கல்வியதிகாரி அறிவித்துள்ளார்.


நாவலர் நீதிவாக்கியங்கள்

'நம்மேல் அன்பு இல்லாதவர்கள் மேலும், நாம் அன்பு உள்ளவர்களாயே இருத்தல் வேண்டும்.'

—ஆறுமுகநாவலர்.

மில்க்வைற் சோப் மேலுறைகள் 10 அனுப்பி ஒரு நாவலர் நீதிவாக்கியப் புத்தகத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க் வைற் சோப் தொழிற்சாலை
த. பெ. இல. 77, — யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது


# 10வது வெற்றி வாரம்

கெப்பிட்டல் (கொழும்பு) வெம்பிளி (கண்டி)

நடிகர்திலகம்
சிவாஜிகணேசன்
ஜெயலலிதா
நாகேஷ், சுந்தரராஜன்,
நம்பியார், பண்டரிபாய்
—நடித்த—



# தெய்வ மகன்


டைரக்‌ஷன் A. C. திருலோகசந்தர்

# இப்பொழுது சினிமாஸ் திரைகளில்

2—வது வாரமாக காட்சியளிக்கின்றது

கிங்ஸ்லி (கொழும்பு)
பிளாசா (வெள்ளவத்தை)
வெலிங்டன் (யாழ்நகர்)

ஜெய்சங்கர்,
கே. ஆர். விஜயா,
சௌகார்ஜானகி,
சுந்தரராஜன்,
நாகேஷ்,
விஜயலலிதா,
அசோகன்'
சான்டோ M.M.A.
சின்னப்பாதேவர்
—நடித்த—




# அக்கா தங்கை

---

4வது வாரம்-சிலோன் என்டர்டெயின்மன்ட் திரைகளில் காட்சியளிக்கிறது

சென்ட்ரல் (மருதானை) ராணி (யாழ்நகர்) ஜோதி (திருமலை)

ஜெமினிகணேசன்
ஜெய்சங்கர் லட்சுமி
நாகேஷ் விஜயலலிதா
மனோகர் ஸ்ரீகாந்த்
—நடித்த—



கதை — வசனம் — டைரக்‌ஷன்
கே. பாலசந்தர்

# நூற்றுக்கு நூறு

---

3வது வாரம் வெற்றிகரமாக காட்சியளிக்கின்றது

செல்லமகால் (கொட்டாஞ்சேனை) நெல்சன் (திருமலை) இம்பீரியல் (மட்டு நகர்)

எம். ஜி. ஆர்., ஜெயலலிதா, அசோகன்,
சுந்தரராஜன், ஜோதிலட்சுமி, சோ, ராஜம்மா, விஜயஸ்ரீ, ராமராவ்,

- மற்றும் பலர் நடித்த -

# தேடிவந்த மாப்பிள்ளை

(ஈஸ்ட்மன் கலர்) தயாரிப்பு-டைரக்சன் பி. ஆர். பந்துலு இசை எம். எஸ். விஸ்வநாதன்


இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா வீதி, 194 ஏ. இலக்கத்தில் 1971-ம் வருடம் ஐப்பசி மாதம் 24-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது —ஆசிரியர் கோவை மகேசன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org